உ

கணபதிதுணை.



புதிய

# விரதபூஷணன் சரித்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
-6 JAN 1912
MADRAS.

82
1-7-12

சேலம்,

செவ்வாய்பேட்டை புக்டிபோ,

தி. சு. கணபதிபிள்ளை யவர்களாலியற்றப்பட்டு,

சென்னை-சூளை,

பாலவிர்த்தி போதினி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

[இதன் விலை] 1912. [அணா-8.

Registered Copy Right.

O-,8MKP.V
N11
68175

உ

கணபதிதுணை.

புதிய

# ...தபூஷணன்

## சரித்...ம்.

இஃது

உலகப் பிரசித்திபெற்ற சுதேச நாடகக் கம்பெனி
ஜி. எஸ். முனிசாமி நாயுடு, ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிரமர்
டிக்கம்பெனி - மனமோகனரஞ்சித எம். அரங்கசாமி நா
யுடு, தி. முருகேச நாயகர், இராவண - கோவிந்த
சாமி நாயுடு, பி. எஸ். ராமச்சந்திரம் பிள்ளை.
சேலம் கானபொக்ஷம் - ஜி. பொன்னு
சாமி முதலியார், இவர்களால் பாடி
வரும் வர்ணமெட்டுகளமைந்த
இதை

சேலம்,

சேவ்வாய்பேட்டை புக்டிபோ,
தி. சு. கணபதிபிள்ளையவர்களாலியற்றப்பட்டு,

நிகரற்ற ராஜபார்ட்,
முனிசாமிநாயுடு அவர்களால்,
வர்ணமெட்டுகளமைத்து,

சென்னை-சூளை,
பாலவிர்த்தி போதினி பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1911. [அணா-8.

*Registered Copy Right*

உ

கணபதி துணை.

# விரதபூஷணன் சரித்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
6 - JAN 1912
MADRAS.



விநாயகர் துதி.

வள்ளிநாயகியை மணம்பெறுமுருகன்
மனத்திடைநினைத் திடப்பணைக்கை
வெள்ளைவெண்கோட்டு வித்தகக்கரியாய்
மெல்லியல்முன் னுறுமெந்தாய்
கள்ளமில்லுள்ளக் காவலன்விரத
பூடணன்காதை யைக்கரைய
வெள்ளறிவுடையேன் விரும்பினனது
மெய்ப்பதமருள்வ துன்கடனே.

ராஜசேகரன்.

(தாஜராஜ என்றவர்ண்மேட்டு.)

பல்லவி.

மைந்த னிந்த சபையோர்க்கெல்லாம்
வந்தனம் தந்தேன்

அநுபல்லவி.

வந்தனம் தந்தனன் சிந்தைமகிழ்ந்து என்
சுந்தரர்க்குமே

சரணங்கள்.

அருமறையோதிய அந்தணர்மக்கும் அழகியமன்னர்க்கும்
திருவுடைவணிகர் திணிபுவியுழுவோ ரடியவர்யாவர்க்கும்

ஜெயமதுமிகவுடை நமதுஜார்ச்சரசரின்
தயவுருமனுநெறி செங்கோற்கும்

குணமுள நம்மரசாட்சியின் கீழ்வாழ்
குடிபடை யாவர்க்கும் சில
அடிதடி வீரர்க்கும் பல
பணமுள சிலர்க்கும் (ஸிந்த)

ராஜசே:—யாரடா இவிடத்திற் சேவகன்.

சேவ:—மகராஜ் வந்தனம்புரிகின்றேன்.

ராஜசே—கல்யாண் சேவகா. மந்திரியை சீக்கிரம் அழைத்துவா.

சேவ:—ஆக்ஞை பிரபு இதோ அழைத்துவருகிறேன்.

மந்திரி:—மகராஜ் அமைச்சன் நமஸ்கரிக்கின்றேன்.

ராஜசே.—கல்யாண் மந்திரி என்னருகில் அமர்வாய்.

மந்திரி:—ஆக்ஞை பிரபு.

ராஜசே:—ஹே பிரதான் இதுகாறும் நமக்கு முன்னரே சபைக்கு ஆஜராய் நம்வரவை எதிர்பார்த்திருக்கும் நீர் இதுவரைஇன்று வராத காரணம் யாது.

மந்திரி:—அரசே யான் இதுகாறும் சபைக்கு முன்னால் தோன்றுவது வழக்கமாயினும் இன்று நம் நாட்டினுட்சென்று ஒவ்வொரு காரியா காரியங்களும் எவ்வாறு நடக்கின்றதென புலனுக்கெட்டியவரை விசாரித்தும் நேரில்பார்த்தும் தவறியவைகளை சீர்திருத்தி வந்ததால் தாமதப்பட்டது. ஆதலால் அது விஷயம் மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ராஜசே:—ஹே ப்ரதான்.

மந்திரி:—மகாராஜ்

ராஜசே:—நம்முடைய அரசாட்சியில் குடிபடை முதலியவைகளும் அன்னசத்திரங்களில் சதாவிர்த்திகளும் க்ஷேமமாய் நடந்து வருகின்றனவா?

மந்திரி:—அரசே குடிபடைகளும் நம் சத்திரங்களில் சதாவிர்த்திகளும் குறையாமல் க்ஷேமமாய் நடந்துவருகின்றது பிரபு.



இராஜசேகரன் தர்பார்.

(என்னுடன் பிறந்த சங்கை என்றவர்ணமெட்டு.)

ராஜசே. மதியுளமந்திரி மாதமும்மாரி மழைபொழிகிறதா
பொழிந்துநிலம் விளைகிறதா விளைந்து
மாமூல் தப்பாம லன்னதானம்
சதா தழைக்கிறதா.

மந்திரி. புவியதெங்கனும் புகழ்ந்துபோற்றிடும் புண்ணியவரசே
பூசைபண்ணுநின் சிரசே இப்
பூதலமதில் மாத மும்மாரி
வீதம் பெய் தரசே.

ராஜசே. பகுதிகட்டிடும் அரசர்களெலாம் பயந்துகட்டுரூரு
அல்ல அயர்ந்துவிட்டனரா இப்
பாரில் நம்முடன் வீரப்போரிட
உயர்ந்து விட்டனரா.

மந்திரி. அரசர்களெலாம் அடிவணங்கியே அவரவர்பகுதி
உலகிலன்புடன் தகுதி நம்
ஆள் அனுப்பாமல்தான் பணிந்துமே
அனுப்பினர் மிகுதி.

ராஜசே. அகவிலைக்காரர் படிகுறையாம லளவுசெய்கிறாரா
அல்ல களவுசெய்கிறாரா ஈச
னாலய பூசைதினம் தவறாமல்
அன்பாய் செய்கிறாரா.

மந்திரி. வணிசர்கள்செய்யும்வர்த்தகமதில்குறைசொல்லப்போமோ
அவர் நிறைதள்ளலாமோ மறை
வைதீகப்படி பூசையைச் சொல
வையகம் திரமோ.

ராஜசே:—ஆனால் மெத்த சந்தோஷம் எல்லாம் வல்ல இறைவன் செயலன்றி நம்செயலாலாவதொன்றில்லை ஆயினும் என்மன ...கவலை மிகுதியாய் குடிகொண் டிருக்கிறது.

மந்திரி:—அரசே அமைச்சர்க... ...ாகிய யாங்கள் அருகிலிருக்க தாங்கள் கவலைப்படுவதற்கு காரணம் யாது.

ராஜசே:—ஹே மந்திரி என் புதல்வனாகிய விரதபூஷண... ...னை யான் அழைத்ததாகச் சொல்லி விரைவில் அழைத்து வருவாய்.

மந்திரி:—அப்படியே அழைத்து வருகிறேன் அரசே.

## விரதபூஷணன்.

(புல்புல் லோகம் அஜாரா கோகி ஆயிபகார் என்றவர்ணமெட்டு.)

பல்லவி.

உன்னைப்பாதம் சதாபோற்றி யேபணிந்தேன் (உன்)

அநுபல்லவி.

யேபணிந்தேன் சிரம்தான் தணிந்தேன் (உன்)

சரணங்கள்.

அகமுமகிழ்ந்தே
அன்புடன்
சுகமெனக்கிட்டு
சுந்தராஎற்
அடியிணையானும்
போற்றினேன் தானே
துயரமடைந்த
றினேன்நானே (உன்)

தகதகன்றிலகும்
தந்தையுன்
கமகமவென்னும்
கழல்பணிந்தே
மதனசொரூபா
தாளினுக்கு
மலரினைச்சாற்றி
னுனக்கு (உன்)



விரதபூஷணன். இராஜசேகரன். மந்திரி.

விரத:—பிதா நமஸ்கரிக்கின்றேன்.

ராஜசே:—கல்யாண் பாலகா.

விரத:—பிதா என்னையிங்கு யாதுகாரணமாய் வரவிடுத்தீர்.

ராஜசே:—என் சந்ததிபெறுக மைந்தனய் உதித்த குழந்தாய் உன் வாலிப திசைக்கு யாதாமொரு அழகிய மங்கையை மணம்புரிவதற்கென் றழைத்தனனடா.

விரத:—தந்தையே என்னவார்த்தை சொன்னீர் மாதர்வலைக்குள் சிக்கி மதியிழக்கும்படி செய்ய நினைத்தீரா சரி சரி நல்லவார்த்தை சொன்னீர். யான் ஒருக்காலும் பெண்களினது கண்

வலையிற் சிக்கி நமனென்னும் வேடர்க்கிறையாக மாட்டேன். எம்பெருமானது திருவடி நிழலையே பரமசுகமாகக்கருது மேலோர் அற்பசுகத்தையும் பெருந்தீங்கை தரும். மங்கையர் ஆசையை கனவிலும் நினையார். ஆதலின் நீரும் இதுபோன்ற வார்த்தை வெறுத்துவிடுவீர் தந்தையே.

(பார்சி வர்ணமெட்டு.)

ராஜசே. மங்கையர் ஆசை மறந்தவன்யாரென்று
சங்கைவிடுத்துரைத்தாய் மூடா — சங்
கொங்கையில்பால்மணம் வாய்மாறவில்லைஎனக்
கெங்கேபிறந்தாயடா கேடா — எங்

விரத. தந்தையுன்வார்த்தையது மந்திரமேயானலும்
நிந்தைநீர்சொல்லவேண்டாம் என்னய்யா — நிந்
விந்தைசெய்பெண்டுகளின் விபரத்தைக்கேட்டிலீரோ
சிந்தைமெலிவேனய்யா என்னய்யா — சிந்

ராஜசே. அஞ்சாதின்னமுர்தத்தை நஞ்சமென்றென்முன்னே
நெஞ்சம்துடிக்கச்சொன்னாய் நாயே — நெஞ்
கொஞ்சவயதென்றுன்னை மிஞ்சவிட்டேனல்லால்
பஞ்சாய்பறக்கடிப்பேன் பேயே — பஞ்

விரத. பிறந்தபொழுதேசாவு நிரைந்துஇருக்கிறது
இறந்தாலுஞ்செய்யேனய்யா என்னய்யா — இறந்
மறந்திடுவீரிப்பேச்சு சிறந்ததுஅல்லவென்று
பொருந்தாதுஎன்னிடத்தில் என்னய்யா — பொருந்

ராஜசே. பிள்ளைஎனவெண்ணியான் கள்ளாசும்மாவிருந்தேன்
தள்ளிஉதைப்பேன்போடா நாயே — தள்ளி
தெள்ளியவித்தை தெரிந்தவனோடா நீ
துள்ளவதைப்பேன்போடா பேயே — துள்ள

ராஜசே:—பேஷ் அச்சா தட்டிகேழ்க்க ஆள் யில்லாவிட்டால் தம்பி சண்டபிரசண்டன் என்பது இன்றுதான் தெரிந்துக்கொண்டேன் என்னடா கொஞ்சமேனு நெஞ்சமஞ்சாத பஞ்சபாதகபடுபாவி. அடாதுரோகி. இன்னாட்டைமறந்துகாட்டை அடைந்து தாஷ்டீகத்துடன்தவம்புரிந்து சாக்ஷாத்எம்பெருமானின் அனுக்கிரகத்தால்உன்னை அடைந்துஇன்னகர்க்ஷேமமுண்டாகி வரசாட்சி வாழையடிவாழையாய் நீடித்திருக்குமெனவெண்ணிய வென்மனத்தில மண்ணிட்டதைப்போல் யேதோ பினத்துகின்றாய் என்ன ஸ்திரீகளின் கொடுஞ்செய்கை தெரிவிப்பாய் சீக்கிரம்.

**வீரத:**—பிதா ஏதோ என்மீது அதிகசினத்துடன் வார்த்தையாடு கின்றீர்கள். ஆயினும் பரவாயில்லை. உலகில் பெண் என்னும் பேய்பிடித்து அதனால் அனேக துன்பத்துக்காளாகி இப்பாவி களால் மோட்சவீடடையாது அந்தியத்தில் நரகபாதைக் காளாக வேண்டுமென்று அடியில் வருமாறு வேதநாயகம் பிள்ளை கூறுகின்றார்.

(இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.)

பல்லவி.

மாதரை எண்ணிடலாகாது எண்ணில்
வந்திடும் தீங்குகள பல ஓது—மறு (மாத)

அநுபல்லவி.

பூதலமேல்பெரும் பாதகமும் விப
ரீதமுமேவரும் ஆதலினால்—மறு (மாத)

சரணங்கள்.

அருமஞ்சள் பூச்சல்லவோ முகக்காந்தி
அடிக்கடி அவள்நிறமாறும் பச்சோந்தி
ஒருமையா யவர்களைவிரும்புதல் பிராந்தி
உடற்குள்புகுந்து பார்த்தால் வரும்வாந்தி. (மாத)

முன்னழகும் பின்னழகுமே பட்டு
முகஅழகானது நெற்றியில் பொட்டு
அன்னநடை என்பதுகவிஞர்கள் கட்டு
அருகில் நில்லாமலேபறந்திடும் சிட்டு. (மாத)

மரித்திடுமாதர்கள் சுகம் அரைக்ஷணமே
மறுநிமிஷத்தி லுண்டாம் துன்பரணமே
பிரிந்திடில் மலஜலம் எலும்புதோல்நிணமே
பிராணன்போனால் நரிநாய் பிடுங்கிடுமே. (மாத)

மேனிமுழுதும் வெளிவேஷத்தின் தளுக்கு
மினுக்கெண்ணை பூசியேகாட்டுவாள் குலுக்கு
ஈனம்மறவே தினம்தினம் தண்ணீர்முழுக்கு
இல்லாவிடில் கப்பலேற்றலாம் அழுக்கு. (மாத)

இடையில் மயக்குவது சாலியன்சேலை
இருகாதில் ஜொலிப்பது தட்டான்கைவேலை
கடையிலே விற்பதுகொண்டைப் பூமாலை
கன்னிக்கு சொந்தமெல்லாம் வெறுந்தோலே. (மாத)

கழுவிவாசனை லட்டாவிடிற் கெட்டவீச்சு
காதவழி அடிக்கும் அதுநிஜப்பேச்சு
தொழும் அழகென்பதெல்லா மேற்பூச்சு
தோகையற் கிழமானால் கனஏச்சு. (மாத)

என்றும் காமதுறர்க்கு ரோகங்கள்நில்லையே
ஈஎறும்போட்ட கையில் வேண்டும் வேப்பிலையே
அன்றுகொண்டவன் கண்டால்வருங் கொலையே
அற்பசுகத்தில் வரும் ஆபத்துமலையே. (மாத)

இதமாகவே மணஞ்செய்த சிமாட்டி
இகபர மிரண்டுக்குமே வழிகாட்டி
இதாமின் ஞர்களைசேர்வோன் காமாட்டி
என்றைக்கும் அவனுக்கு மூத்தவள்பேட்டி. (மாத)

அழகழ கென்பதெல்லாம் வெருஞ்சாலம்
அணியுந் துணியும்போனு லலங்கோலம்
விடல்நிகர் சுகமதைவெறுப்பது சிலம்
வேத விநாயகன்சொல் லனுகூலம். (மாத)

ராஜசே:—மைந்தா ஏதோமகாபண்டிதன் போன்று மாதரை நினைப் பதினல் நேரும் தீங்குகள் பலவென்று நீண்டதோர் பிரசங்கம் செய்ய வந்துவிட்டாய் அன்றியும் மேலோர்கள் இயற்றிய நூலுள்ளும் மேற்கோள்எடுத்துங் காட்டுகின்றையே எதோ இன்னொருதரம் அவர்செய்த கீர்த்தனத்தை சாற்றுபார்ப்போம்.

விரத:—மாதரைநினையாதே மறு மாதரைநினையாதே.

ராஜசே.—பிள்ளாய் போதும் போதும் நிறுத்து நிறுத்து இப்போது நீசொல்லிய பல்லவிக்குமாத்திரம் பொருள் சொல்லி மேற் சொல்லத் தொடங்குவாய்.

விரத.—பிதா இங்ஙனம் அமரிக்கையாயிருந்து பொருள் சொல்லச் சொன்னீரே மெத்த சந்தோஷம் சொல்லுகிறேன் கேட்பீர். நெஞ்சே நீ வேறுமாதரை நினைக்கவும் செய்யாதே என்பதாம். அன்றியும், மாதரை மா-பொன்னையும், தரை-மண்ணையும், மறுமாதரை-வேறு பெண்களையும், நெஞ்சே-நீ நினையாதே என்றார். இதனல் மண், பெண், பொன் ஆகிய மூன்றனையும் தேடேல் இச்சை வையேல் என்பதாம் தந்தையே.

ராஜசே:—ஹா என்னருந்தவப் பேறே நீயுரைத்தபொருள் மிகச்சிறந்ததே யாயினும் தனக்குரியவளல்லாத வேறுமாதரை யன்றோ நினையாதே என்கிறார் பெண்களையே நினையவேண்டா மென்கிறாரோ இல்லையே.

விரத.—தந்தையே வினையின் பயன்போல் நற்குணமுண்டய வொருவர்க்கு தீக்குணமுடைய பெண்ணும், தீக்குணமுடைய மைந்தற்கு நற்குணமுடைய மங்கையும் லபிப்பதால் இங்ஙனம் இல்லறம் செய்வதிலும் துறவறமேசிறந்ததென்று நமது ஔவை.

“பத்தாவுக்கேற்ற பதிவிரதையாமாகில்
எக்காலும்கூடி வாழலாம்—சற்று
தாறுமாருக நடப்பாளேயாமாயின்
கூறுமற்சன்யாசம் கொள்.”

என்று சொல்லுவதால் இல்லறமே செய்யென்று சொல்லினளோ இல்லையே.

ராஜசே:—இல்லற வாழ்க்கைக்கு நல்லபெண் கிட்டாத போது தானே சன்யாசம்.

விரத.—ஆம் ஆம் ஆயினும் அதுகிடைப்பது மகா துர்லபம் கிடைத்தாலும்.

கலித்துறை.

சேய்கொண்டாருங்கமல செம்மலுடனேயாவ
பாய்கொண்டானும்பணியும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டாலுங்கொளலாம் நூறுவயதாமளவும்
பேய்கொண்டாலுங்கொளலாம் பெண்கொள்ளலாகாதே.

கைப்பிடிநாயகன் தூங்கையிலே அவன்கையை எடுத்
தப்புறம் தன்னிலசையாமல்வைத்து அயல்வளவில்
ஒப்புடன்சென்று துயில்நீத்துபின் வந்துறங்குவளை
எப்படிநான் நம்புவேன்இறைவா கச்சியேகம்பனே.

விருத்தம்.

கிட்டையிலே இருந்துமனத்துறவடைந்த
  பெரியோர்கள் நிமலன் தாளை
கிட்டையிலேதொடுத்து முத்திபெறுமளவும்
  பெரியசுகம் கிடைக்கும்காம
வெட்டையிலேமதி மயங்கிசிறுவனுக்கு
  மணம்பேசி விரும்பிதாலி
கட்டையிலேயிருந்து நடுக்கட்டையிலே
  போமளவும் கவலைதானே.

விரத:—பிதா கவனித்தீர்களா பெண்களால் கவலைக்கிடமே யன்றி சுகம் சிறிதும் பெறப்போவதில்லை தாங்கள் சொல்லும் இது

விஷயமான் வார்த்தை என் செவிக்கேறுவது துர்லபம் தந்தையே கேளும்.

கலித்துறை.

அலைகடல்உண்டஞான வகத்யனேநேர்வந்தாலும்
தொலைவருசுகனேவந்து சொல்லையேமாற்றினாலும்
தலைதனைக்கொய்துஎன்னை சமுத்திரத்தெறிந்திட்டாலும்
நிலையிலாமங்கையாசைநினைப்பிலும் வேண்டேன்வேண்டேன்.

ராஜசே:—அடா மகா பண்டிதனைப்போல் வாயாடுகிறாய்.

(ஓடாதே ஓடாதே மன்னா என்றவர்ணமெட்டு.)

கமாசு-ஆதி-தாளம்.

பல்லவி.

மூடடாமூடடாவாயை என்மொழியைத்தவர்வாயானால்
அழிவாய் அழிவாய் நீயும். (மூடடா)

அநுபல்லவி.

தேடற்கரியசாஸ்திரம் தெரிந்தவன்போலநீவாய்
ஆடுராய்கவனிநான் அரைவேனரைவேனிதோ. (மூடடா)

சரணங்கள்.

பரமன்சிரத்தில்வைத்தான் பங்கயனாவில்வைத்தான்
வரதன்மார்பினில்வைத்தான் சிரமொன்றுபிர்மனத்தான் (மூட)

மதித்திடுதபத்திலும்வானப் பிரஸ்தமென்று
மாதவமிருப்பதை மடையாஅறிந்திலைநீ (மூடடா)

பத்தினியுடன்வாழப் பகருதேபலவேதம்
பாரினில்மாதர்தனை பழித்தனையேஅனீதம் (மூடடா)

இந்ததிருமணம் இயல்பாசெய்திடில்நீதான்
இகத்தில்கீர்த்தியும்பெற்று பறத்தில்முத்தியடைவாய் (மூடடா)

வஞ்சியர்மீதுனக்குவஞ்ச மென்னசொல்லடா
கெஞ்சிகெஞ்சிகேட்டுந்தன் நெஞ்சமிகக்கல்லடா (மூடடா)

ராஜசே.—அடா சாக்ஷாத் பகவந்தர் முதலான மும்மூர்த்திகளென்ன வாலி முதலான வீராதிவீரர்களென்ன ரிஷீஸ்பரர்களென்ன இப்பேர்க்கொற்ற புண்ணியாத்மாக்களே இல்லரந்துழன்று மனைவி மக்களுடன் வாழ்ந்திருக்க அதை கவனியாது வாய்க்கு வந்தவாரெல்லாம் பிணத்துகின்றாய் பெண்களை அலட்சியமாய்

புகல்கின்றனேயே சந்திரமதி பொய்யுரைக்கப்பயந்து தன்னுடி நக ரிழந்துதன்னுபகனைப்பிரிந்து காலகண்டனுக்கடிமையாய் அநேக துயரடைந்து பாலனை பாம்பிற்கிரையாக்கி தன் உயிர்விட துணிந்து விரதம் சாதித்தாள். தமயந்தி தன்னை இச்சித்த வேடனை எரித்தாள். நளாயினி ஆணிமாண்டவியர்விடியமுன் தாசியறுக்க சபித்ததற்கு விடியாதிருக்கசபித்தாள். அனுசூயை மும்மூர்த்திகளையும் குழந்தையாய் சபித்தாள். திருவள்ளுவர் மனைவி உலுவகி அனேக ரிஷிகளுக்கு இல்லறத்தை நடததிக்காட்டி கற்பை நிலை நாட்டினள். சல்லமாதேவி தன்கணவன் வார்த்தைக்காய் ஈசனிடம் புணரச்சென்ருள். வெண்காட்டுநங்கை சீராளனை அறுத்து கறிசமைத்தாள். இன்னும் எவ்வளவோ கற்புள்ளகன்னியர் உலகில்இருக்க இதுகளை கொஞ்சமும்நினையாது தோஷம் சொல்லத்துணிந்தாய் அடா சரஸ்வதி லட்சுமி பார்வதிஇவர்கள் பெண்ணல்லவா நம்பாட்டியார் ஔவை பெண்ணல்லவா இதுகளிருக்கினும் நீஓதியவேதத்தில் தந்தைசொன்மிக்கமந்திரமில்லை தாயைச்சிறந்த கோவிலுமில்லை, என்று இருக்கிறதே அந்தே ஏட்டை தள்ளி படித்துவிட்டயா அடாவேண்டாம் இனியாகிலும் உன் துற்குணத்தை விட்டு விட்டு என்வார்த்தைக் கிணங்கு இல்லாவிடில் வெகுதுயரப்படுவாய். இனியாகிலும் கவனி.

விரத.—தந்தை அடியேனுக்காய் வெகு சிரமமெடுத்து அனேக திருஷ்டாந்தம் எடுத்தோதுறீர் என்மன தொப்பவில்லை கேளுங்கள்.

கலித்துறை.

வெற்றிகொள்ளெந்தனய்யா வேதமேபொய்த்திட்டாலும்
சிற்றிடைமாதராசை சிறணமுமில்லைகண்டீர்
மற்றிதுநீங்கலாக மன்னநீரெதுசொன்னாலும்
சற்றுயான்தவறமாட்டேன் தவமெனச்செய்குவேனே.

ராஜசேகரன்.

(தையலே உனைநினைந்து நினைந்துருகி தயங்குறேனடிமானே
என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

மன்னவனென்றெந்தனையே விண்ணுலகெலாமறியும்
மதியாதவனே நீயும் பார் பார் பார்

அநுபல்லவி.

இன்னேரமுந்தனுக்கு இயம்பினேன்பலவாறு
இளகாமனத்தினனே இனி உயிர் காரு காரு (மன்)

சரணங்கள்.

நீதிமொழியதனை ஓதி அனுதினமும்
பாதிஉடல்மெலிந்தேன் காதில்வாங்காதுநீயும்
சேதிபலபுகன்றாய் ஆகிதனை மறந்து
வாதியதாய்எனக்கு தீதுபுரியவே நீ

வந்தயடாபயலே உந்தனதொருசிரம்
சிந்துவேநிங்கிருந்தால் முந்திஓடிநீ போ போ (மன்)

விரதபூஷணன்.

பல்லவி.

அண்ணலேஉரைத்தசேதி என்னுளே தெரிந்துகொண்டேன்
அப்புறம்தடுப்பவரிங்கார யார் யார்

அநுபல்லவி.

மண்ணினில்மாதர் ஆசை எண்ணலேனென்றதற்காய்
கண்ணருளின்றியென்னை புண்ணுறச்செய்தீரே போம் போம் (அண்)

சரணங்கள்.

மோகம்பெண்களுடைய தாகம்அதிகமானால்
சோதம்வருமன்றிசொக் கோகம்முறைப்படிசம்
போகம்தவறினாலே மேகம்சருமவியாதி
காசம்வலிப்பெனுமனே கம்வியாதிவரும்

கண்டறிந்துசொன்னேனின்னுள் மண்டலம்புகழுமன்னா
தண்டமென்னைசெய்யக்கோபம் கொண்டவரே போம் போம் நீரும்
(அண்ணலே உரைத்தசேதி)

ராஜசே:—அடா மூடாத்மா இதுவரைபிள்ளையென் றெண்ணியவெனக்கு ஈமனாகவா வாய்த்தாய் இதோ காட்டுகின்றேன் வேடிக்கை ஆரடா இவ்விடத்திற் சேவகன்.

சேவ:—மகாராஜ்.

(பார்சி வர்ணமெட்டு.)

சேவகனேவாடா நீ சீக்கிரமிவனைத்
தாக்கிட்டுவேண்டு ஆக்கினைபடிநடடா

அந்தமூடஎன்மந்திரி சிந்தைமெலிந்திட
இந்தப்பாவியை பந்துகானுவில்தள்

குத்துகுத்தெனக்குத்து கோபமதாகவே
பேசுவனாகில் எத்தெத்தனஎத்து

வெற்றிகொள்காவலரே வீணனாமிவனை
மாணவும்போக்கி தூணினில்கட்டிடுவீர்

கட்டியடித்திடுவீர் கடுகெனஇன்றே
ஜெயிலினில்கொண்டே நெட்டியடைத்திடுவீர்

மலைமிசையேயிந்த மடையனினுடலை
கடகடவெனவே நொடியிலுருட்டிடுவீர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 8 JAN 1912 MADRAS

வசனம்.

அடா சேவகர்களே என்வார்த்தைக்கடங்காத பிள்ளைஎன்னுங் கள்ளனை எள்ளளவு மிரக்கமின்றி கம்பத்திற் கட்டியடியுங்கள் அதற்கு வசப்படாதுபோனால் கள்ளரையடைக்கும் பந்துகானாவிலடையுங்கள் இதற்கும் அவன்மனம் திரும்பாவிடில் தினப்படி இம்சித்து கடைசியாய் மலை சிகரத்திலிருந்து உருட்டிவிடவேண்டியது தவறினால் என்கை உடைவாளால் துண்டித்துவிடுவேன், ஜாக்ரதை.

சேவகர்கள்:—மகாராஜ் அப்படியே செய்கின்றோம்.

## மந்திரி சத்ய விரதன்.

(வந்தனம்தந்தனம்சிந்தைமகிழ்வுடன் அந்தமதான என்றவர்ணமெட்டு.)

மண்டலமெங்கும் மகிழ்ந்திடுராஜனே
கண்டோர்மனத்திற் களிவிசுவாசனே

மண்டியிட்டேனடியேன்—தமக்கு
தெண்டனிட்டேனிட்டேன்கடையேன்—பல
தொண்டுசெய்ய உடையேன்

மன்னர்கள்போற்றும் மகிடகெம்பீரனே
பொன்னகர்தன்னில் புகழ்ந்திடுந்தீரனே

மண்ணில்செயித்தமன்னா—எந்தன்
கண்ணிர்களித்தகண்ணா—கோபம்
பண்ணியவீரமென்னா

குற்றமதொன்று குழந்தைசெய்தாலதை
இத்தரைதன்னி லிடுக்கங்கள்செய்வது

எந்தலைவீண்வாது—குழந்தையின்
போம்தலைதப்பாது—அதற்காய்
சாந்தம்வை என்மீது

வ-ம்:—அரசே இளங்கன்று பயமறியாது நமது குழந்தையோ சிறு பாலகன் லோக விவகாரம் அறியாதவன் ஆகையால்தா னிப்படி செப்புகின்றனன் பாலியவிரக்தி என்பது கொஞ்ச நாளைக்குதா னிருக்கும் ஆகையால் சற்று நிதானித்து பார்ப்போம் நாளுக்கு நாள் சித்தம்மாறினாலும் மாறும் ஆகையால் குழந்தையை தண்டிப்பது சரியன்று.

ராஜசே:—மந்திரி எவ்வளவோ நயபயத்துடன் அனேக நீதிவாக்யங்களை போதித்தும் கொஞ்சமேனு நெஞ்சிற் கொள்ளாது என்னை மீறி வார்த்தையாடுகின்றான் அப்பேர்ப்பட்டவனுக்கு தண்டனை விதிக்கப் புகுந்தால் தடைபுரிகின்றாய் வேறு உபாயம் எதுவாகிலுமுண்டானால் தெரிவிப்பாய்.

சத்யவி.—அரசே ஸ்திரீகளை இரட்டைக்கொம்பு மகா ரிஷிகளென நினைத்திருந்த ஸ்திரீகள் சுகமறியாத கலைகோட்டு மகாரிஷியுங்கூட நாளுக்கு நாள் ஸ்திரீகள் பழக்கத்தால் ஞான சமுத்திரக் கரை ஏறி காமசமுத்திர மூழ்கினறென்றால் கேவலம் சாமான்யம் இந்த பால்யனோ அதை கடக்கவல்லவன் அதலாலிவனை யௌவன ஸ்திரீகள் உபசாரம் செய்யும்படியாக காராக்கிரகத்திலடைத்து வைத்தால் அவன் திடமறியலாம் பிரபு.

ராஜசே:—சரி உன்மனோ இஷ்டப்படி கொண்டுபோ சண்டாளனை என்முன் னிறுத்தாதே.

வீரதபூ:—ஆ ஜெகதீசா எனக்கா இக்கொடுந்துன்பம் விதித்தாய் கருணையங் கடலே.

(ஆரேசையா படுமைதோரே பைய்யா என்றவர்ணமெட்டு.)

பல்லவி.

வந்தாள்ஈசா வடிவாம்பிகைநேசா
வந்தனய்சர்வேசா.

அநுபல்லவி.

சொந்தமுடனாளா யோ
சுவாமிகண்பாரா யோ

சரணங்கள்.

அந்தமுடனென்னய்யா
அடியனையாள்துய்யா
சொந்தமுடனேமெய்யா
தொண்டனெனை அன்டினமாற்
கண்டனெனமண்டனிலே. (வந்தா)

பல்லவி.

தந்தைஎன்மீது தரித்தனர்வீண்வாது
தயைசெய் இப்போது

அநுபல்லவி.

நிந்தைபுரிந்தாரென்னை
நிமிஷமாறேனுன்னை

சரணங்கள்.

விந்தையிதற் கென்செய்வேன்
வினையைத்தினம் வைவேன்
சிந்தைமெலிந்து நைவேன்
சிறுவனுனை இதுதருணம்
கருதினனுன் னருள்பெறவே. (வந்தா)

வசனம்.

ஆ! ஜெகதீசா சந்ததமு முந்தனை சிந்தையில் வந்தித்துகொண்டிருக்கும் எந்தனை இந்தவிதிக் காளாக்க என்ன பாதகம் செய்தேன் கருணாகரா சர்வஜீவ தயாபரா ஏழையாகிய அடியேனை ரக்ஷிக்கப்போகாதா ஆ! வீரர்காள் கடவுளென்னை இவ்வித அபகீர்த்திக் காளாக்கி வைத்தனரே நல்லது என்னை சீக்கிரம் காருகிரகத்துக்கு கொண்டு போவீர்களப்பா ஆ ஹா இவ்விடத்தில் அதிக பயங்கரமாயும் இருள் சூழ்ந்தும் இருக்கிறது சயனிக்கின்றேன்.

## பிரம்ம ராக்ஷசி.

(ஸ்ரீராமச்சந்திரனே என்னும் வர்ணமெட்டு.)

கண்டபேரண்டியைஎன் முண்டாவால்தானடக்கும்
சண்டமாருதமொத்தான் யான் யான் யான்
மண்டையுடைத்துஉயிர் கொண்டுபோமேமனிடம்
சண்டைபுரிவோரெந்தன் றாள் ஆள் ஆள்
வாதுசெய்வோரைநல்ல சாதுக்களாக்கிவிடும்
வல்லாளகண்டிஎந்தன் பேர் பேர் பேர்
பேதகம்என்னகாணேன் பேசாதுஇங்கொருவன்
தாதுகலங்கிதூங்கும் நேர் நேர் நேர்
மாதர்மனங்கவரும் நாதஇவனழகில்
மாரனோஐயாரனிவன் தான் தான் தான்
மையல்மிககொண்டனடா தையலுனைகண்டவுடன்
ஐயநீவெழுந்துமுத்தம் தா தா தா



பிரம்ம ராக்ஷசி.

வசனம்.

நாம் யதாப்பிரகாரம் அரசன் காராகிரகத்தின் வழிசெல்லும் பாதாள உலகத்தில் அரசுபுரிந்துவிட்டு பூலோக விநோதத்தை காணவரும் தருணத்தில் தன்னந் தனிமையாய் யாரோ ஓர் சுந்தர புருடன் சயனித்து ஆயாசத்துடன் உரங்குகின்றான் அவனது சுந்தரமுகத்தை நோக்கில் இந்திரனும்வெட்கி அந்தரத்திலுற்றானென்பதற் கென்னதடை மனிதரை கண்டவுடனே கொன்று தின்னும் ராக்ஷசியாகிய நானுங்கூட இவனை கண்டவுடனே காமபாணத்தாற் கலங்குகின்றேனே அந்தோ யான் எப்படி உயிர்பிழைப்பேன் எவ்விதத்தாகிலும் இவனைக்கட்டியணைத்தாலன்றி என்னுயிர் நிற்காது நித்திரையி லிருக்கிற இவனைச்சேர்ந்தால் மகாதோஷம் உண்டா

கும் மேலும் இவன் ஓர் விரதங்கொண்டவன்போலுங் காணப்படு கிறான் ஆ ஆ என்ன நான் பித்தரைப்போற் பிதற்றினேனே இவ்னே அரசகுலத்தவன் யானோ ராக்ஷசி எப்படி எங்களிருவருக்கு மணம்பொருந்தும் சீ சீ இதைவிட்டு வேறுயோசனை செய்யலாம் இவனுக்குத் தகுந்த அழகியையாவது தேடிக்கண்டு இவனுக்குச் சேர்த்து இப்பேர்ப்பட்ட அழகனும் அழகியும் சுகமனுபவிக்கக் கண்டு களிப்பதே தான் எனக்கு சந்தோஷம் ஆகையால் நல்ல சுந்தரியை தேடிவர முயல்கின்றேன்.

ராக்ஷசி.—அடா பூதனே இன்னயகனுக்கு சமதயான ஓர் அழகிய நாயகி இருக்குமிடம் தேடிக்கொண்டு வருவாய் சீக்கிரம்.



பூதன்.

பூதன்.—அம்மணி அப்படியே கொண்டுவருகின்றேன்.

## சந்திராயுதன்.

(எனது மனதுக்கேற்றவள் என்னும் வர்ணமெட்டு.)

விந்தையுள்ள சபையோர்கட்கு மைந்தன் வந்தனம்
மைந்தன்வந்தனம் மனமகிழ்ந்து தந்தனன்

வேதாகமமுணர்ந் தோர்க்குமே
வித்தையில்வல்லோர் யார்க்குமே
மாதாபிதாயிரு வோர்க்குமே
மன்னருடைய செங்கோற்குமே

மதியோர்க்கும் நிதியோர்க்கும் (விந்தை)

சந்திரா.—ஏ பிரதான்.

மந்திரி.—மகாராஜ் அமைச்சன் நமஸ்கரிக்கின்றேன்.

சந்திரா.—மந்திரி என் அருந்தவப் புதல்வியாகிய சரசலோசனி புஷ்பவதியாகி மாதம் ஆறாகிவிட்டன ஆகையால் அன்னவட்கு (திருமணம்) சீக்கிரமுடிக்கவேண்டி யிருப்பதால் நல்ல குலத்திற்பிறந்த அரசனெங்குளன் அதைத் தெரிந்துரைப்பாய்.

மந்திரி.—அரசே யாதாமொரு பெண்ணுக்கு கல்யாணஞ் செய்யத் தொடங்குமுன் பெண்ணின் அபிப்பிராயத்தையே முக்கியமாய் தெரிந்துகொண்டு நாயகனைத் தேடத் தொடங்குவது நலம் ஏனெனில்,

"குலம்வேண்டுமென்றிருப்பார் குலத்துள்ளார்
கல்வியினாற் குன்றயானான
பலம்வேண்டுமென்றிருப்பார் தந்தைமார்
பருத்தபெருஞ் செல்வமுள்ள
தலம்வேண்டுமென்றிருப்பார் தாய்மார்கள்
எவ்வனமு மழகுஞ்சார்ந்த
நலம்வேண்டுமென்றிருப்பார் நாறுகுழள்
மங்கையர்கள் நலத்தில்மிக்கார்."

பந்துவானவன் பெண்ணின் விவாகத்திற்கு எத்தனிக்கும்போது நல்லகுலத்துப்பிறந்த நாயகன் வாய்க்கட்டுமென்று கருதுவன், தந்தையோ நல்ல கல்வியாளனா யிருப்பவனைத் தேடுவன், தாயானவள் அதிகச்செல்வமுடையவனா யிருப்பின் தமது பெண்ணுக்கு உச்சிமுதல் உள்ளங்கால் வரையும் ஆபரணங்களைப் போட்டுக் கண்களிக்கலாமென நினைப்பள், விவாகத்திற்குரிய பெண்ணோ சௌந்தரியவானா யிருந்தால் நன்மையென்று தியானித்து வண்ணமா யிருப்பள், மேலும் ஆயுள்

முழுவது நாயகனுக்குவந்த நன்மை தீமையெல்லாம் நாயகியும் உடனனுபவிப்பவ ளாதலால் அவர்கள் விருப்பத்தின்படி நடப்பதே உசிதம்.

சந்திரா.—மந்திரி அப்படியே எனக்கும் சம்மதம் நீ சீக்கிரமாகத் தாதியை யனுப்பி சரசலோசனியை என்னிடம் வரச்செய்.

மந்திரி.—ஆக்கினை பிரபு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 6 - JAN 1912 MADRAS.


சந்திராயுதன்.


சரசலோசனி.

## சரசலோசனி.

(பாதம்பணிந்தேனய்யா தபோநிதி என்னும் வர்ணமெட்டு.)

வந்தனம் தந்தேனய்யா—என் தந்தையே
வந்தனம் தந்தேனய்யா

சிந்தைமகிழ்ந்துந்தன் செந்தாமரைபதம்
அந்தமதாய்துதி சுந்தரியானுமே (வந்)

அருமைமகள் நின்று சிரமேற்கரங் கொண்டு
பரமனேநீ என்று திறமாய்நினைந் தின்று (வந்)

(வந்தனம் தந்தனம் சிந்தை மகிழ்வுடன் என்ற வர்ணமெட்டு.)

சரசலோ:—வந்தனம்தந்தனம் சிந்தைமகிழ்வுடன்
அந்தமதான அரியநின்பாதத்திற்

கின்பமாயான்தானே இன்று
அன்புடன்செய்தேனே செய்தால்
கண்களிபூமானே

சுந்தரமானசுகுர்தமா தெந்தனே
இந்தசபைக்குநீர் இன்பமாயழைத்த

சங்கதிஎன்ன அய்யா இந்த
மங்கைக்குரைப்பீர்துய்யா கேட்டு
நங்கைமகிழமெய்யா

சந்திரா:—கண்ணேஉனக்கு கணவனைத்தேடியே
இன்னகர்தன்னில் இதமாகவேமணம்

செய்திடவேநினைந்தேன் அதற்காய்
ஆள்விடவேதுணிந்தேன் உனக்கு
அன்புடனேமொழிந்தேன்

அற்புதமான அழகியமங்கையே
தற்பரனற்றவத்தாலுதிதங்கையே

அன்னமேஎன்கிளியே என்
அற்புதப்பொன்ஞெளியே நல்ல
வன்னக்குயின்மெழியே

சரசலோ.—ஆ தந்தையே என்ன சொன்னீர்.

(ஆர்காணு நீர்சில வேடரே என்ற வர்ணமெட்டு.)

சரச.—தந்தையே உந்தனுக்கிந்தமதி வந்தசிந்தை
இதென்னமோவிந்தையோகாண்கிலேன்
எந்தையேஎன்னிடம் இந்தவார்த்தைசொல்லில்
சந்தேகமில்லாமல் நிந்தையாய்சாகுவேன். (தந்)

சந்தி.—அன்னமேமானே அழகியசெந்தேனே
சொர்னமேயிவ்வார்த்தை சொல்லுவதாகுமா
மின்னிடையேயுனக் கென்னமதியிது
மேலோர்கள்கேட்டாலே தாழ்மையேபேசுவார். (அன்)

சரச.—கல்யாணமென்றெந்தன் காதில்கேட்டாலேயான்
அன்யாயமாகவே அய்யாசாவேன்சத்யம்
வில்லேனுங்கொண்டென்னை கொல்லினுங்கொல்லையா
சல்லியவார்த்தையைச் சொல்லாதீரென்னையா. (தந்)

சந்தி.—சுந்தரமானசுகுர்தமானே நீதான் இந்திரனைக்
கேட்டாலுமிப்போ செய்வேன்மணம்

சொந்தமாயுன்வார்த்தை எந்தன்முன்சொல்லாதே
தூருசெய்வாருன்னை பாரிலுள்ளோரெல்லாம் (அன்

சரச.—ஆடவர்சங்கதிஅய்யா தெரியாயாகூடும்போதல்லவா
கொஞ்சுவார் கெஞ்சுவார்
பாடுதீர்ந்துபோனல் பற்றிலர்பெண்கள்மேல்
சாடுமாரியென சண்டாளர்யெண்ணுவர் (தங்

சந்தி —அம்மணிநீயும் அரைந்ததுஞாயந்தான்
வெண்மணிசெய்யார் பெரும்புத்திபுள்ளவர்
கண்மணிநெஞ்சம் கலங்கிடவேண்டாம்நீ
நன்மைதரும்நல்ல நாதனையேமணர் (அன்)

சரச —பஞ்சவர்பங்காளி பாஞ்சாலிதன்னையே
அஞ்சாதுசெய்த அவமானம்பார்த்தாரே
வஞ்சனையாய்நளன் பெண்சாதியைவிட்டு
அஞ்சாமல்சென்று னடவியில்ஞாயமா (தங்)

சந்தி.—உத்தமர்மீது உரைத்தாயேவீண்பழி
பத்தினிஎன்றபேர் பார்அரியச்செய்தார்
கற்றதெல்லாம்வீணய்கழறுராய்விருதாவில்
பத்தினிவாயினில்பட்டோர் எவர்மீண்டார் (அன்)

சரச.—வீணவார்த்தை விளம்பவேண்டாம்நீரும்
பூணேன்மனத்திற் புருடரின்ஆசையை
காணேன்கினவிலும் கணவரெனக்கென
ஏனேபிதற்றிக்கொண் டேங்கித்திரிகிறீர் (தங்)

சந்தி.—பெண்ணென்றல்லோ உனக்கின்னேரம்போதித்தேன்வின்
ணனம்பேசி விளம்புறய்வீண்வார்த்தை
சண்ணேஉனையிப்போ கண்டிப்பாய்தண்டிப்பேன்என்ன
சொன்னலும்இனி விடேனுன்னை (அன்)

சரச.—தண்டனைகண்டனை தாங்களேசெய்தாலும்
ஒன்டொடிக்கிமணம் ஒருபோதும்வேண்டிலேன்
கொண்டஎன்எண்ணம் குரையேன்ஒருநாளும்
அண்டபுவனத்தை ஆள்வோர்கள்வந்தாலும (தங்)

விருத்தம்.

திடமுளகாவற்காரா சீக்கிரமிங்கேவாடா
படிதனிலெந்தன்சொல்லை பழித்துமேல்பகருகின்ற
கொடியசண்டாளிதன்னை கொஞ்சமுமஞ்சிடாது
பிடரியைப்பிடித்துத்தள்ளி பிர்பிதுசெய்வாய்நீயே.

(மத்தகமோத்தனத்தி லித்தரைபுகழுநவ ரத்தினமிழைத்தமாளுள் என்றவர்ணமெட்டு.)

பல்லவி.

அட்டகாசமாக என்முன் சட்டதிட்டமாகப்பேசும்
கட்டுக்கடங்காதபேயை சொல்
தட்டிப்பேசுமெர்தன்சேயை (அட்ட)

அநுபல்லவி.

செட்டபுத்திதன்னைவிட எட்டுத்தாமெத்தமெத்த
கொட்டினேனநேகநீதி மட்டியாமிவளென்வாதி-(அட்டா)

சரணங்கள்.

நாட்டி லிவளேதனை பூட்டி உடலதனை
ஈட்டி அதனில்குத்தி நீட்டி அனலில்கொண்டு
வாட்டி பலர்நகைக்க தோட்டி யால்எங்குபரை
சாட்டி உலகறிய நாட்டி விடவேவேணும்
கெட்டநினைவுள்ளமட்டி இவளைக்கொண்டு
விட்டிடுஜெயிலினில் விதிப்படி ஆகுதின்று-அட்

## சரசலோசனி.

(வங்காரமார்பிலணி என்னும் வர்ணமெட்டு.)

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன தனதானு

மங்காத வாழ்விஞெடு ஈகொசுகு மீதிலெனே
யண்டாது நாளுமொரு மேனியென வேவளர
வண்கோவை யாரமணி சேலேயுண வாதிதரு மொருதாதை

வந்தோத நீதிமொழி யோவிதுத காதுவென
அஞ்சாது நேரிலெதிர் பேசிபிடி வாதமொடு
மன்றுடி பேதையிது காலமதி லேகொடிய ஜெயில்போக

சங்கோத மீதுதயி லாதியருள் தாமரையி
னின்றுதி வேதநெறி யேயொழுக மூவுலகை
தந்தானெ னீள்தலேயி லேயெழுது மூழ்வினையின் பயன்தானே

சம்போசி வாவெனநின் சேவடியி லேதொழுதொர்
தண்போது மாலேயொரு போதுமணி யாதபடு
சண்டாளி யானவெனே யேயருள நீவருவை யிதுவேளே

கொங்கோதி மாதுமையு மூடல்பிறி தாகியொரு
வெங்கோப மாகரிதன் கோடுகொடு வேறுமொரு
குன்றோடு மோதுவதை மானவவன் மாமுலைக ளழகோடே

குன்றாத மார்பமதி லூடுருவ வேதழுவ
வங்கோட நீயமரு மாமலையைக் காலுகரம்
கொண்டாட வேகமுடை னேழைமதி ராவண னுமெடுபோதில்

தங்காத லானகதி தேவிதலை மேலதனில்
பொங்காது நீள்சடையி னூடுபுகு மாறதிக
சங்கோச மோடொளிரு மாசனகின் றேயெழக லடிபர்வ

சந்தூடு தேககெரி வாகிபுது யாழினவன்
செஞ்சாம கீதமுறை பாடிமுறை யோவெனநின்
றன்கோப மாறியருண் மாரிபொழி தேவசிவ பெருமானே.

வசனம்.

ஏ ஜெகதீசா என்னை இவ்விதிக்காளாக்க எண்ணங்கொண்டனையா அடியாளை ஆதரிக்கப்போகாதா அவனன்றி அணுவசையாதென்பதுபோல சர்வமும் உன்செயல்தான் இருக்கினும் யான் அனுபவிக்குங் கடன்களை யார் அனுபவிப்பார் எனக்கு நித்திரை அதிகரிக்கிறது சயனிக்கிறேன்.

பூதம்-வசனம்.

ஆ! ஆ! ஆ! ஆ! ஆ! ஆ! என்னரசியாகிய பிரம்மராக்ஷசி சொல்லியபடி ராஜகுமாரனுக்குத் தகுந்தபெண்ணை தேவலோகமெங்குந் தேடினேன் கிடைக்கவில்லை மிகவிசனத்தோடு திரும்பிப்போய் என் அரசிக் குறைத்துவிடலாமென்று வருகிறவழியில் இந்த இருள்நேரத்தில் பளீரென்று ஏதோ அங்கோர் ஜோதி என் கண்ணொளி மயங்கும்படி வீசுகிறது யாதெனப் போய்பார்க்கிறேன்.

கலித்துறை.

வானத்துலவுமதியோ வலாதுமலர்த்திருவோ
மீனத்துவசமதனுர் களிக்குமினற்கொடியோ
தேனிற்றிகழுமொழியா ளிவளையென்றேவியிடம்
நானுஞ்சுமந்துகொடுபோவ னின்றுநலம்பெறவே.

வசனம்.

நமது பிரம்மராக்ஷசி சொல்லிய முப்பத்திரண்டு லக்ஷணங்களும் நிரம்பிய சுந்தரமங்கை இந்த பாவையே யாவள் இன்னவளை

எடுத்தேக என் தோள்கள் செய்த பாக்கியமே பாக்கியம் இதோ இங்கு காவலாக பல ஆயுதங்களுடனே காத்துககொண்டு நிற்கும் வீரர்களை என்னுடைய மந்திர சக்தியால் மயங்கித் தூங்கும்படி மாயப் பொடியைத் தூவிவிட்டு இன்னவளை எடுத்துக்கொண்டு என்னரசியிடம் செல்கின்றேன்.

பூத.—ஏ! எங்களரசியே தங்களுத்திரவுப்படி ஒரு பெண்ணை கொண்டு வந்தேன்.

பிரம்மரா.—எதோ காட்டுவாய் ஆ! ஆ! என்ன அழகு என்ன சுந்தரம் இப்பேர்ப்பட்ட பெண்ணையல்லவா இந்த புருடன் சுகிக்க நாம் பார்த்தானந்தப் படவேண்டும் ஆகிலும் இந்த சதிபதிகள் தங்களுக்குள் ஒவ்வொருவர் மனதும் எப்படிக் கிருக்கின்றதெனவறியலாம் முதலில் இந்தபுருஷனை எழுப்பிவிட்டு நாம் மறைவிலிருப்போம்.

## விரதபூஷணன்.

கலித்துறை.

வேதம்படித்துவிரதங்கள் னேற்றும்வெகுதினமாய்
தீதென்றுமாதர்சுகமே தெரியேன் திரிந்தலைந்தேன்
மாதங்கடோருந்தினந்தோரு மிந்தநன்மங்கைமலர்
பாதம்பணிந்துபதம்படத் துன்பம்பரந்திடுமே.

(பத்தினிமானே உத்தமிதானே பாவையரிவள்தானே
என்னும் வர்ணமெட்டு.)

பல்லவி.

அன்னமோதேனே அழகியமானே ஆரணங்கிவளாரோ

அநுபல்லவி.

மண்ணிலிவட்குவமை எண்ணுதல்மதிஈனம்
பண்ணியஅருந்தவத்தால் கன்னிவாய்த்ததலைமாதவம் (அன்)

சரணங்கள்.

அன்னநடை மின்னலிடை பின்னல்சடை கன்னல்மொழி
அழகிஇவள்தானோ—இவளழகை
இன்னவிதமென்றுரைக்க இன்னிலத்திலென்னிருக்கு
தெனக்கெனபடைத்தாரோ—படைத்ததினால்

கன்னல்வில்லின்மாரனவர் சின்னபின்னமாகஎன்மேல்
கணைகளைவிடுத்தாரோ—விடுத்ததாலே

மின்னிமின்னிடித்ததுபோல் என்னுளேகலங்கலுற்றேன்
கன்னியிவட்குமெய்யாரோ

சன்னல்பின்னலாகவின்று மானே-நீ
என்னைவந்தணைகுவா செந்தேனே-இனி
புண்ணியமுண்டாகுமடி தானே-வெகு
கண்ணியமுண்டாகுமடி நன்னயமதானமானே (அன்)

வட்டமிட்டிருமாந்திட்ட சட்டதிட்டமான இவள்கொங்கை [கை
இதைதொட்டுவிட்டால் கெட்டாயென எட்டிஅடிப்பாளே இந்த நங்
நல்ல-கட்டிலில்படுத்துறங்கும் பொட்டுமிட்டநேர்த்திஎன்ன மங்கை
உயர்பட்டுடுத்தும்கட்டழகி விட்டிடுவாளோதனியே இங்கே
இவளட்டகாசமாகத்தூங்கும் ஜோரு

அந்தகெட்டிஎன்ன சொல்லலாம் நீ-பாரு
இவளைதட்டினல் அதிஷ்டமகம்மேரு
இவள்சட்டண எழுந்திருந்தால்
அட்டிசெய்வாளோ அறியேன் (அன்)

வசனம்.

ஆ! ஆ! என்னஆச்சரியம் நவரத்தினங்களிழைத்த இந்த மஞ்சத்திற் சயனித்திருக்கின்ற மாதரசியின் வடிவை யென்ன வென்றெடுத்துரைப்பேன். ஆ ஆ இவளை பார்த்தமாத்திரத்தில் காமபாணத்தில் கலங்கநேர்ந்ததே ஆ ஆ இவள் அனுமதி பெற்றாலன்றோ நமது ஜென்மமீடேறும் இவளின்னாளெனத் தெரியவில்லையே.

(சோமனே காமனே என்னும் வர்ணமெட்டு.)

பல்லவி.

அந்தரத்துலவுகின்ற சந்திரனையொத்தமுகச்
சுந்தரிஇவளழகின் விந்தையென்சொல்வேன்

அநுபல்லவி.

மந்தகாசமானமுகம் அந்தம்விலைகொள்ளுஞ்சகம்
இந்திரர்அடைந்திலரே இந்தவைபோகம் (அந்)

சரணங்கள்.

காரத்தவர்க்குக்களிதீரும் பார்த்தவர்க்குபசிதீரும்
வேற்றுமுகம்பார்த்திட விருப்பமில்லையே

கோத்தமுத்துப்பல்லினுளே ஆத்திரத்துடனேயானும்
சேர்த்தணைக்கில்சிவயோகம் சித்திக்கும்தித்திக்கும்தேனே (அங்)

வசனம்.

ஆ ஆ இவள் மார்பின்கண் வாரிட்டுவிம்மிப் புடைத்திருகி மணி மார்பிட மிலாங்கவர்ந்து வட்டமிட்டடி இட்டு நாளுக்குநாள் மேல் வளர்ந்து பூரித்து முத்துமாலையிட்டிருமாந்து பட்டவர்த்தனயானை மத்தகத்தோடெதிர்த்து வாதிட்டு மல்லிகைப்பூசெண்டினைத் தினம் வாட்டப்படுத்தி வரையப்போரிட்டு மைந்தர்கண் மனம் சூரையிட்டு மேற்புளகித்து வச்சிரத்தின் புதுசெப்பினை தோழமைகொண்டு பொன்னினை பொடியாயிராவி மீதிற் பொட்டிட்டதென்னவே தேமற்படர்ந்து செம்பொற்சரிகை வேலையிட்டு புனைந்த ரவிக்கையை இருக்கி கிழித்து புறப்பட்டு வாசனைபூந்தாரிட்டு வரவர பளப்பாகி யுயர் தங்ககிண்ணத்தை யொத்து சந்திரகாவிசேலை வல்லவாட்டுக் குட்டதும்பி அண்ணாந் திடையினிற்றுங்காதெனக் கணத்தோங்கிய தனத்திற் கென்னவுவமை யிருக்கிறது.

விரதபூஷணன் காதல்.

சிதவனசத்தரும்பைச் செப்பலாமவ்வரும்பு
ஆதவனைக்கண்டா லலருமேசூதாடு
வட்டென்றுவமை மதிக்கலாம்வட்டதனை
வெட்டென்றுசொல்ல விதியுண்டேகெட்டடலிச்
சக்ரவாளத்தைச் சரியுரைக்கலாமதுவும்
மிக்கசிறகுடைத்தாய் விட்டதேஒக்குமெனப்
பாரப்பருவாலப் பச்சிளநீரெண்ணலாம்
ஆரப்புளகமரும்பாதே வீரமதன்
வண்ணமுடியென்று மதிக்கலாமம்மகுடந்
தண்ணெனவும்வெச்செனவுந் தாராதேபண்ணரிய
சித்ரமணிச்செப்பென்று செப்பலாமச்செப்பு
புத்தமிர்தபோகம் பொசியாதேசுத்தநதிச்
சுந்தரஞ்சேர்புற்புதத்தைச் சொன்னாற்பனிநீருஞ்
சந்தனமுங்குங்குமமுந் தாங்காதேவிந்தைசெறி
அந்தகமுங்கோங்கி னரும்பெனலாமவ்வரும்புக்
கிந்தமுகக்கருமையெய்தாதே சந்தமிகும்
பூரணகும்பங்களெனப் போற்றலாமக்கும்பந்
தாரணியுமொண்சுணங்குந் தாராதேசீரணியும்
மாகனகவெற்பெனலா மற்றந்தவெற்பானர்
கோகனகக்கையாற் குனிந்ததேவாகுசெறி

பந்திணைகளென்று பகரலாமப்பந்தும்
இந்துநுதலார்கைக் கிடைந்தெழுமேதர்தமிகும்
பூங்கொத்தினையாய் புகலலாம்பூங்கொத்துந்
தேங்குதென்றல்வீசச் சிதருமேமாங்கனியின்
பக்குவமாமென்று பகரலாமக்கனியும்
மிக்ககிளிகோதிபிடின் மீறுதேதக்கபெரு
வாருமதயானையிரு மத்தகமென்றேறுதலையப்
பாகர்க்கிருகொந்தார் பயந்ததே. ஆகையினால்

வசனம்.

வேறென்ன உவமை இருக்கின்றது. இம்ம நாசி அயர்ந்து நித்திரை புரிகின்றாள்.

(வாயைத்திறந்துகோஞ்சம் பேசடி என்னும வர்ண மெட்டு.)

பல்லவி.

கண்ணே எழுந்திருந்து பாரடி—நல்ல
காமரசமே பதில் கூறடி

அநுபல்லவி.

பண்ணேனபசாரம் பாலன்நமஸ்க்காரம்
பாதகனுக்கே மேதினிமெய்க்க
மாதுநீசொக்கோக லீலைஉரைக்க (கண்)

சரணங்கள்.

சேலம்கணேசன் சிறந்தபதம்பாடுன்
சிந்துரபொட்டென் சிந்தைமருட்டுன்
அந்தரமட்டுன் விந்தைபகட்டும்
ஆடி பதம் பாடி நாமும் நாடி சேர்வோம் ஜோடி

அந்தரமதனி விந்திரபோகம் ஹ ஹா அறிந்தில னிந்தவைபோகம்
ஆகமப்படி அற்புதலீலைகள் சாகசப்படி செய்குவேனடி

நங்கைகும்ப மிரண்டு மிரண்டு
நத்தினேன் நத்தினேன் நாயகிஉன்னை
சித்தமிரங்கிநீ சேர்ந்திடு என்னை
சரசச் சரசக் கலவிக் கலவிப்
புரியப் புரியத் தெரியும் தெரியும்
தயங்கிடாதே நீ தானே மானே
மயங்கினல் வாரா மகிழ்வது தேனே (கண்)

வசனம்.

ஆ ஆ பெண்கள் நாயகமே ரஞ்சித மிஞ்சிய செஞ்சிலைமாரன் நெஞ்சினில் விடுத்த பஞ்சபாணத்தால் மிஞ்சிய காமமுற்று பஞ்சு போற் பரதவிக்கின்றேனே அவை பெஞ்சிடும்பொருட்டுன் கிஞ்சுக வாய்திறந்து கொஞ்சியணைந்தால் நின் சரணத்தைத் தஞ்சமென் றெண்ணி நீயிடும் வேலைகளை யட்டியில்லாமல் கெட்டியாய்ச் செய்யத் திட்டமா யிருக்கின்றேன். சட்டழகணங்கே ஆ ஆ நாமெவ்வளவோ சொல்லியு மிவள்நித்திரைத்தெளியவில்லை நாமிந்தமாதைக்கண்டு விரகங்கொண்டோம் அவள் நமக்கு சுகத்தைக்கொடுக்க பிரியமில்லாமல் நித்திரைசெய்கின்றாள். ஆகையால் இவள்மேல்வீழ்ந்து புறண்டாலிங்கனஞ்செய்து பார்ப்போம் ஆ ஆ இவள் ஸ்தனமானது எவ்வளவு மிருதுவாயிருக்கின்றது நல்லது நாமிங்குவந்ததற்கோ ரடையாளவங் கொண்டுபோக வேண்டி யிருக்கின்றமையால் நமது கணையாழியை இவள் விரலிற்பூட்டிவிட்டு இவள் கணையாழியை நமது விரலி லணிந்துகொள்ளுவோம், ஆ ஆ இவள் கணையாழி நமது விரலுக்கும் நமதுகணையாழி யிவள் விரலுக்குஞ் சரியா யிருக்கின்றதே என்ன விபரீதம் அய்யோ என்றுமில்லாத பாழும் நித்திரை இந் நல்லநேரத்தில் வந்து கொலைபுரிகின்றனவே சற்று நித்திரை புரிந்து பிறகு இம்மாதை காணுவோமா, ஆம் ஆம் அதுதுவேசரி மஞ்சத்தில் சயனிக்கின்றேன்.

பிரம்மராட்.—அடா பூதனே இப்புருடனின் தாத்பரியம் தெரிந்துகொண்டோம் ஸ்திரீயை எழுப்பி அவள் மனதெவ்வாறென தெரிந்துகொள்வோம், ஆதலால் அம்மங்கையை எழுப்புவாய்.

சரசலோசனி.

வசனம்.

நம்மிட சப்ர மஞ்சத்தில் சயனித்திருந்தோம், இப்பொழுது ஏதோ ஓர்புதியகாராக்கிரகத்திலிருக்கிறோம் இவ்விடத்தில், யாரோ ஓர் சுந்தர புருடன் சயனித்திருக்கிறார் இவர் முகக்காந்தி நித்திரையிலேயே ஒளி வீசுகின்றது அட்டா இவர் மதனா இந்திரனா மதனாகில் மேனி வனுத்துக்காட்டுமே இந்திரனாகில் ஆயிரங்கண் விலங்குமே, அல்ல சுப்ரமண்யனா, அவராயிருந்தால் முகம் ஆறிருக்கவேண்டுமே மற்ற யாரா யிருக்கலாம்,



விரதபூஷணனைக் கண்டு சரசலோசனி மோகித்தல்.

பல்லவி.

மாரனோதீரனோசுத்த வீரகுபேரனோதான்
மண்டலந்தனிலெங்கினும் கண்டதேயில்லை

அநுபல்லவி.

சூரசம்மாரவேலனோ சுந்தரகோபாலன்தானோ
ஆரெனச்சொல்லிவிட யென்னாலும்வல்லையே. (மார)

சரணங்கள்.

அத்தனயன்மால்புகழும் சுத்தமாமுகத்தழகும்
இமைத்தவர்க்குச்சொல்ல யெந்தன்மனமில்லையே
பத்தனேபத்தனேவுன்னை நத்தினேநத்தினேயென்னை
இத்தருணம்சேர்த்தனை யேகாதசிபலன்கிடைக்கும். (மார)

கலித்துரை.

கஞ்சத்தைவென்றமுகக் காந்திவீசகவிமலர்கொள்
மஞ்சத்தின்மீதுதுயிலுந் துரையிவன்மன்மதனோ
வஞ்சிக்குவாய்த்தவயதோடு நல்லவடிவழகென்
னெஞ்சத்தையின்றுமெழுகா யுருக்குநெருப்பிதுவே.

வசனம்.

இவருடன்கூடி சுகம் அனுபவிக்காமல் போகப்படாது ஆ! ஆ! நித்திரையி லிருக்கின்றாரே எழுப்பினால் தோஷம் இருந்தாலும் சரி என் மனம் பொருக்க வில்லையே அடா சாமி அடா என் துரையே எழுந்திரு ஐயோ பரிதாபம் அயர்ந்து நித்திரை போகிறார் அடா உன் பிரியசகி சரசலோசனி இதோ வந்துவிட்டேன் எழுந்திரு என் காமங் கரைபுரளுதே கன்னியாகிய என்னுடல் வாடுதே கடினசித்தங் காட்டுவதடாது, தையல் வருந்தும் தோஷம்விடாது அடா

சாமி இனிசகிக்கேன் ஏவிதியே எனக்குக் கெதியாவிட்டாய் ஆ! ஆ! இவனுர் இவனுக்கெனன ஆத்திரம், சீ சீ மதனுபொரு என்துரை சிங்கம் எழுந்திருப்பார், இவ்விவித மோகனங்களுடன் கூடி அனுபவிக்காமல் கர்வங் கொண்டிருந்தேனே.

(ஞானிலத்தாசை என்றவ ர்ணமெட்டு.)

பல்லவி.

அதிககருவம்படைத்தேன் வுலகில்நானே
மதியைமறந்தேவிடுத்தேன்

அநுபல்லவி.

சதிகாரிபடுதோஷி சங்கதியரியேனே
விதியும்இதுவோவென்று விடுத்தனன் நானின்று
விரும்பினேநாடி

துரையேதுரையே விரைவுடன்வோடி
வருவாய்வருவாய் மருவநாம்ஜோடி

வந்தியெந்தனேசிந்தைமகிழ
இந்தவுலகமெங்கும்புகழ

அந்தமதனும் சிந்தைநொந்தழ
கந்தவேளென எங்குமுனேதொழ
சொந்தமனேவியான் வந்துதாழ்விழ

சுருதிகொக்கோகம் நூல்படியென்னே
மருகஇன்னுமென்னதடை

சரணங்கள்.

விந்தைகணபதி பதம்படிக்கிறேன்
சிந்தைமகிழவே கால்பிடிக்கிறேன்
அந்தமாகவேதினம் நடிக்கிறேன்

அருள்வாயெனக்குவுன் போகம்என்னே
அணைந்துதருவாய்மதன சம்போகம்வுலகில்
வேறேஒருபோதும்வேண்டேன் வைபோகம் (அதிக)

பிரம்மரா.—அடா பூதனே இன்னேர்களுடைய ஆசையிருந்த நேர்த்தியையும் அவர்கள் விழித்து ஒருவரைக்கண்டு ஒருவர் பாடுந்கீத விநோதத்தையும் கேட்கக்கேட்க என்ன ஆநந்தம் விளைத்ததுபார்த்தையா இவர்களேதெய்வம் கூட்டுவிக்கும் நீ இந்த சுந்தாமங்கையை முன்னிருந்தவிடத்தே சேர்த்துவிடு நான் எனதிருப்பிடம் செல்கிறேன்.

## விரதபூஷணன் தன்னருகில் சயனித்த மங்கையை காணாததால் பிரலாபித்தல்.

அடி சரசலோசனி, அடி சரசலோசனி, ஆகா எங்குசென்றனளோ காண்கிலனே, என்னமாய்கையாயிருக்கிறதே, இராவில் என்னருகிற்சயனித்து என்விரதத்தை பரதநாட்டியத்தில் விட்டு பறந்தனளே, அடடா என்ன ஆச்சரியம். இவளை

(காதல்மீருதேன்செய்வேனடி என்றவர்ணமேட்டு.)

தரு.

எங்கெனசென்று யான்தேடுவேன்
என்னருமை கண்ணின்மணியை (எங்)

நங்கைஇவளுக்கிணை எங்குமில்லைவுலகில்
தங்கபொற்கிண்ணஸ்தன மங்கையவளாரோதான்
தண்டையும்தலையினிற் கொண்டையும்அழகிய
தொண்டையும்முழந்தாள்கள் நண்டையும்வென்றிடும்
தோகைஇவளெங்கனம் ஓ கோ சென்றுளோகாணேன்
ஆகையினால்என்னுயிர் போகுதிதுதருணம்
அணைத்து அவளிரு ஸ்தனத்தைஎனதிரு
கரத்ததனில்வெகு சிரத்தையுடன்பிடித்து
முத்தமிட்டுநகம் வைத்தழுத்திய சுகத்து
மெய்ப்பரவசத் துடனேயதி
மோகமதாய்மதன் ஆகமலீலை
அநேகவிதங்கள்வை போகமதாய்செய்ய (எங்)

விரத.—அடா காவலா.

சேவ.—மகராஜ்.

(பட்டாபிஷேகம் என்னும் வர்ணமேட்டு.)

காவலனே இங்கு ஆவலதாய்வந்த
நாவலன்மெச்சும் நளினசிங்காரி-என்
எவலில் வந்தவளா—அல்ல
தேவலன் தந்தவளா
காராக்கிரக முற்றமாது தூரபோன மாயமேது

மஞ்சத்தின்மீதுன்னை அஞ்சுகமேகூடி
கொஞ்சிசுகிக்காத பஞ்சைபாவியானேன்

தஞ்சமென் றுன்னைநாடி—உன்னை
கெஞ்சினேன் ஓடிவாடி
பஞ்சபாணன் செய்யும்வாதை பாவை சகிக்கிலனே
பட்டுபோவாயென்னை விட்டுபோவாயென்று
கட்டிற்றுயில்போது மட்டியறிந்திலேன்
சட்டென போயினளே—அடிபாவி
விட்டென்ன மாயினளே
தொட்டிலனே தோகையுன்னை கட்டியணைவாய் மானே

சேவகன் இராஜசேகரனிடம் முறையிடல்.

சேவகன்:—அரசே நமது இளவரசர் ஏதோ புத்திவிகாரப்பட்டு பினத்திக்கொண்டு திரிகின்றார் எங்களை மங்கையர் எங்கே எங்கே என்று அடித்து துன்பப்படுத்துகிறார் வருவீர் சீக்கிரம்.

ராஜசே:—அப்படியா இதோ வந்துவிட்டேன் செல்வீர் புத்திரா என்ன ஏதோ பினத்தி காவலரை அடித்து இம்சித்தனயாம் எதற்காக.



விரதபூஷணன்.



ராஜசேகரன்.

வஞ்சமரியாத பஞ்சபாவியானும்
தஞ்சமென்றுந்தனை கெஞ்சுரோனய்யா
கொஞ்சுந்தயை செய்குவாய்என்னய்யா மின்சேன்மனம் உய்குவாய்
கோபமனஸ்தாப மெனுஞாபகமு வேண்டாமினி அய்யனே (வஞ்)

சின்னமதியாலே பண்ணேன்அபசாரம்
அண்ணலேயின்று அறிந்தேன்அதன்சாரம்
ஆதரித்தாளுவாயே என்னய்யா சூதரியாத பேயேன்
சுந்தரவிஸ்தாரதீர இந்திரர்தனக்குமர ரரசுபுரிபவரே (வஞ்)

கருத்துக்கிசைந்த கண்ணாட்டிஇவளென்
வருத்தமதின்றி வரைந்திருப்பீராகில்
மருக்கேன்ஒருபொழுதும் என்னய்யா-வெருக்கேன் மனமுழுதும்
மாதினிடவேதனையால் பாதகனென்-தாது கலங்கினவே (வஞ்)

வஞ்சியினாசையால் பஞ்சபாணனவன்
நெஞ்சமதில்பகை வஞ்சகம்வைத்துமே
வாட்டுறானென்னசெய்வேன் மதன்கணை-பூட்டுறானரைநைவேன்
பூதலத்தில்ஏது யினிபாதகியால் வாழ்வுகுரிகினவே (வஞ்)

அட்டிசெய்யாமலே மட்டியெனக்குமே
சட்டனவேமனம் இஷ்டபடிசெய்தால்
விட்டிடேன்யென் னுயிரைவேரோநான் தொட்டினேன் கன்னியரை
துஷ்டனெனகெட்டனன்யான் அப்படிசெய்யில் விட்டுவேனுயிரை.

ராஜசேகரன்.

(திருப்புகழ் மெட்டு.)

எட்டுத்திக்குமே என்பெயர்கேட்டவர்
கட்டுத்தட்டியி லெப்படி நுழைகுவர்
பெட்டுச்சொல்லதை என்னிடமொழியுவ (தளகாமோ)

மட்டித்தனமுடன் வார்த்தையுரைத்தது
கட்டிக்கரும்பெனெனக்கு இனித்தது
தொட்டுத்திரிபவ ரிவ்வுலகத்தினில் (வுளராமோ)

கெட்டக்கினவது துயிலினில்நேர்ந்தது
திட்டிக்கெட்டிடா ஜெயிலிநுழைந்திட
அட்டதிக்குளோர் ஆருமேஅஞ்சுவர் (நகர்மீதே)

துஷ்டத்தனமதை இன்றுடன்விடுவிடு
அஷ்டச்சனியனை விட்டுமேசுடுசுடு
கெட்டத்தனமதை வந்திடதடுதடு (புவிமீதே)

கஷ்டப்படாமலே கணபதிபதமதை
நஷ்டப்படாமலே நற்றினமுரையிதை
துஷ்டத்தனமது செய்திடயனமலதை (விடுகோதே)

(எப்படிதான் தாய்வயற்றில் இருந்தீரோ என்ற-வர்ணமெட்டு.)

பல்லவி.

அய்யனேமெய்யனே இந்த அனீதமுரைப்பதினல்
துய்யனேதுயராலாது சுகமதில்லை

அநுபல்லவி.

செய்யனேபதிலுக்கிரம் சீழியசெய்வதினல்
கையிலேஇவவாள்எடுத்து கழுத்தையறுத்துக்கொள்வேன் (அய்)

சரணங்கள்.

தையலைநீர்காட்டிடீரா தந்தையே என்
மையலிதைமாற்றிடீரா
ஐயையோநான்என்னசெய்வேன் அரும்பாவிகெதியில்லை
சைய்யோகம்யான்செய்யாவிடில் ஜனித்தால்மருஜனனம் (அய்)

கனவதுகண்டனோநான் என்னையா
நினைவுமறந்தனேதான்
குணமகிலாவார்த்தையை கொண்டெர்தனி முரைத்தீர்
மணமகளைத்தனிடம் மாட்டினகணையாழிபார் (அய்)

---

பொது வசனம்.

விரதபூஷணன்சரித்திரம் இங்கே இவ்வாறிருக்க சரசலோசனி அவ்விடத்தில் விரதபூஷணனைக்காணது பிரலாபித்தல்.

(அண்ணியரே அண்ணியரே என்ற-வர்ணமெட்டு.)

புண்ணியரே என் புண்ணியரே
புண்ணியரே புண்ணியரே
புருடரிர் உயர்ந்தவரே சிறந்தவரே
நிறைந்தவரே மறந்தவரே- (புண்)

(தாதி) நித்திரைகால அர்த்தராத்திரியில்
உத்தமிநீகண்டதை உரைத்திடுவாய்

(சரச.) எங்கடிமன்னன்
(தாதி) இங்காரில்லையே

(சரச.) எங்குசென்றரோ
(தாதி) மங்கைகாணேனே (புண்)

(சரச.) சுத்தமெல்லாம்பேசுராய்
(தாதி) சுத்தபொய்யேன்வீசுராய்

(சரச.) பித்தமுண்டாதாதியே
(தாதி) உத்தமி அன்னீதியே
(சரச.) இஷ்டபோகன் இல்லையா
(தாதி) துஷ்டன் ஆரும்வல்லையே
(சரச.) கஷ்டப்படபோகுமோ
(தாதி) துஷ்டசெய்கையாகுமா (புண்)
(சரச.) காட்டுராயா இல்லையா
(தாதி) கள்ளர் ஆரும்வல்லையே
(சரச.) வாட்டுவேன் சவுக்கினுல்
(தாதி) வந்ததுபினத்தினுல்
(சரச.) அடிவாதுசெய்யாதே
(தாதி) பாதகமம்மா
(சரச.) பட்டிபோடிநீ மட்டிபோடிநீ
எட்டிபோடிநீ சீசீசீசீசீ
தோஷம்வேண்டாமே பாசமென்னடி (புண்)

(தில்தாரேயாரேஙைலம்சே ஙைஞ என்னும்-வர்ணமெட்டு.)

பல்லவி.

நேசவிசுவாசதுரை எங்கனம் சென்றுரோகாணேன் (நேச)
எங்கனம்சென்றுரோகாணேன் மங்கையர் ஆபரணம்பூணேன் (நேச)

அநுபல்லவி.

திங்கள்முகத்தவன் மங்கையர்க்கேத்தவன்
நங்கையின்கொங்கையை செங்கையில்பற்றி- (நேச)

சரணங்கள்.

அன்னநடைதாதிகாள் மன்னவரைகாணீரா
இன்னேரம்கண்ணுளர் எங்கேதான்போனுரோ
பஞ்சபாணன் அம்பு வஞ்சியின்மேல்வம்பு
நெஞ்சம்பிளந்திடவஞ்சம் செய்யுதே எஎன்- (நேச)

சப்ரமஞ்சமதில் அர்ப்புதலீலைகள்
இப்புவிமெய்த்திட ஒப்பிரம்கூடலாம்
நன்பன்கணபதி அன்பன்பதம்தனை
இன்பமாய்பாடிரு பேரும்விளையாடலாம்- (நேச)

## தாதிகள்.

(ஸ்ரீராமச்சந்திரனே என்னும் வர்ணமெட்டு.)

தேசாதிதேசமதில் ராஜாதிகாரமுற்ற
நேசாவுமைபணிந்தோம் யாம் யாம் யாம்

ஆசாபாசமதாகஈசன் தவத்தில்வந்த
நேசியரென்னன்னே குணம்கேள் கேள் கேள்

அர்த்தராத்திரிநேரமதில் நித்திரைதனிலெழுந்து
கத்துராள்பலவிதமாய் தான் தான் தான்

சுத்திசுத்திஎங்களையே மொத்துராள்கைதனிலேயே
பித்தமும்பிடித்ததை பார் பார் பார்

எங்கடிகணவனென்றும் மங்களகுணளனென்றும்
சங்கையின்றிதிட்டுரா ளிந்நாள் நாள் நாள்

கங்கைபுனைஈசனருள் மங்கையர்மேல்பாசமிரில்
திங்கள்னுதலாள்எனுவான் தான் தான் தான்

சாட்டைகொண்டுஎங்களையே மாட்டுராள்அலைகுலைய
கேட்டிடரிதுசமயம் நீர் நீர் நீர்

அட்டகாசம்செய்யுவதை சட்டெனஎழுந்துவந்தால்
திட்டியினல்கண்டிடலாம் தான் தான் தான்

வந்தனம்யாம்போய்வருவோம் சிந்தனையிலாமல்நீரும்
சொந்தமனை தனைகாண வா வா வா

வசனம்,

தாதி:—ஆண்டவனே என் எஜமானுகிய சரசலோசனி விடிந்தவுடன் எழுந்து தானய் பினத்திக்கொண்டு எங்களை வாயில் வந்தவாரு திட்டியும் என் மன்மதன் எங்கே துரை எங்கே என்று கேட்க நாங்கள் இவிடத்தில் யாரும் வரவில்லையென் றுரைத்தோம் நிலத்தில்விழுந்து பிரண்டு முகத்தி லரைந்துகொண்டு கண்ணீர் ஆருய்பெருக துக்கித்து எங்களை சாட்டையினல் திரேகம்வடுப்படும்படி யடித்துவிட்டு திடீரெனகீழ்விழுந்துமூர்ச்சித்துவிட்டாள் தங்களிடம் இதுசங்கதி அரிவிக்கவந்தோம்.

சந்திரா:—இதோ வந்துவிட்டேன் போங்கள். அடா இதுவென்ன ஆச்சரியம் மூர்ச்சித்துகிடக்கின்றாளே. ஏ குழந்தாய், ஏ குழந்தாய் சரசலோசனி, சரசலோசனி எழுந்திரு உனக்கென்ன கெடுதி ஐயோ என்னமோ ஓர்வித ஆயாசத்தால் மூர்ச்சித்து இருக்கிருள். சரசலோசனி உன் தந்தைவந்து இருக்கின்றேன் எழுந்திரு.

சரச:—ஆ தந்தையே எனக்கேன் இத்துயர் உண்டாக்கினீர்.



சரசலோசனி. சந்திராயுதன்.

(போற்றிசெய்தேன் ஐயா உன்னை போற்றி என்றவர்ணமெட்டு.)

பல்லவி.

தெண்ட னிட்டேன்-ஐயா உன்னை-தெண்டனிட்டேன்

அநுபல்லவி.

தெரியாமலே சிறியாள்செய்த
சிறிதென்பிழை பொருமென்றுயான் (தெண்)

சரணங்கள்.

மண் ணுலகிலென்போல் கன்னியர்யாருளர்
மாபாவிகண்டிலேன் யானே-எந்தன்
எண்ணந்தெரிந்துதான் மன்னனைகாட்டிநீர்
இப்போசெய்வேன் மணம்தானே
உன்னைந்துயான்குரையோதியே உன்பாலடைந்தேனரியே
எந்தனிடஅன்னீதியை இனியேவரும்பிரக்கியாதியே (தெண்)

கன்னியறியாது மன்னுபிதற்றினேன்
காத்தருளக்கடன் தானே—எந்தன்
சென்னியுன்பாதத்தை அண்ணலேவைத்து
சிரப்பாய்ப்பணிந்தனன் தானே
மன்னுஉனைமரியாதையே பண்ணேனெனுமன்னீதியே
எண்ணுதினிஇதுசேதியே இனிமேல்வரும்உன்கியாதியே (தெண்)

தந்தையுன்வார்த்தையை சிந்தைதவகிக்காமல்
நிந்தையாஎண்ணினே னய்யா-இப்போ
வந்ததுபுத்தி வருந்தவேண்டாம்நீரும்
வையமிசழ்ந்திடு மெய்யா
வாட்டங்கொளவேண்டாமினி தாடடிகனே இனிஎன்சனி
ஓட்டம்நடைபோனதினி ஒருபோதயான்மருக்கேகினி (தெண்)

வ-ம்:—ஐயோ தந்தையே என் விஷயத்தில் தங்களுக்கு இவ்வளவு சிரமம்வேண்டுமா என்முன்னிலையில் உன்கணவன் இவர்தான் இவரை மணந்துக்கொண்டு வாழ்என உரைத்திருந்தால் நான் மருப்பேனோ தப்பிதம் உங்கள்மேரில் இருக்க என்னை ஜெயி லில்போட்டு வருத்தினீர்களே தகுமா.

சந்திரா.—அடடா இவளுக்கு புத்தி மாராட்டமாய் விட்டது கிரக சாந்தி செய்யவேணும் ஆகையால் சோதிடர்களை அழைத்து அவர்கள் சொல்வதை தெரிந்து அப்புரம் யோசிக்கலாம்.

சரசலோசனி.

(பூமி மெச்சிடு மென்னும் வர்ணமெட்டு.)

சேலம்வாழ்கணேசன் பாலன்கீதம்பாடும்
பக்தனும்-பரிசுத்தனும்-மனமுத்தனும்-அவன்
சித்தம்வைத்தெந்தனை முத்தம்தந்தாலுயிர்
கர்த்தனும்-என்மேல்-பக்தனும்
தங்கரும்பாண்டும் எங்கேஎங்கேஎன்று
தேடுதே-மனம்வாடுதே-பதம்பாடுதே-அர்த்த
சாமமாமிருளில் காமபாணமது
போடுதே-கண்ணை-மூடுதே
முஞ்சமேல்துயின்றால் கொஞ்சமேனுநித்ரை
வல்லையே-என்னதொல்லையே-நினைவில்லையே-இங்கு
வாட்டங்கொண்டலர் சிமாட்டிமீதில்மனம்
மில்லையே-பெருஞ்-சள்ளையே

சாதமுண்டோனு மாதம்ரெண்டதாச்சு
சாமியே-இந்தக்காமியே-இனிபூமியே-இச்

சடலவிட்டுமுயி ரடையுங்காலம்துரை
சாமியே-நானுங்-காமியே

ஓடிவந்துஎன்னை கூடிச்சேரமனம்
வல்லையோ-சுகமில்லையோ-குணம்கல்லையோ-இங்கு

வாடியாடிப்பதம் பாடுமென்மேல்மனம்
மில்லையோ-என்ன-தொல்லையோ

சந்திரா:—யாரடா இவிடத்தில் சேவகன்

சேவகன்:—மகராஜ் அடியேன் தயாராய் இருக்கின்றேன்.

சந்திரா:—நமதரன்மனை ஜோதிடர்களைஅழைத்துவருவாய் சீக்கிரம்.

சேவகன்:—இதோ செல்கின்றேன்.



ஜோதிடன்.



விநாயகன்.

ஜோதி:—இதுவென்ன ஆச்சரியம் நமக்கு எவனுகிலும் வீடுதேடி வந்து குடிக்கும் கூத்திசிலவுக்கும் கொடுத்துவிட்டு போவான் இன்று மணியோ பனிரெண்டாயும் ஒன்றும் காணேம் மதுரை வீரய்யா இது உன் திருவிளையாட்டா இன்னும் பார்ப்போம்.

விநயகம்:—ஆரய்யா ஜோதிடர்.

ஜோதி:—ஏதோ பச்சை விழுந்தாப்போல் இருக்கிறது ஏனப்பா நான்தான்.

விநயகம்:—எனக்கு ஓர் ஆரூடம் சொல்கிறீரா.

ஜோதி:—தம்பி அதுதான் என் தொழில் என் தட்சணையை கொடுத்தால் தடையின்றி சொல்கிறேன்.

விநயகம்:—என்ன கொடுக்கவேணும்.

ஜோதிடன்:—ஐந்து ரூபாய்.

விநய:—இந்தாருமநான் நம்மமகாராஜா கோர்ட்டில் ஒருவன் பணம கொடுக்க வேண்டுமென்று பிரியாது செய்திருக்கிறேன் அது அனுகூலமாகும் ஆகாது என்றுசொல்வதும் தவிர என் எதிரியின் அடையாளம் விபரமாய் சொல்லவேண்டும்.

ஜோதி:—பனிரெண்டில் குறையச்சொல்லும்.

விநயகம்:—பதிரெண்டு.

ஜோதி.—மேஷம், ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், கடகம்.

கவி.

கடகமும்வந்ததாலே கவலையுமிகவுண்டாகும்
நடயதுமதனமப்பா நம்பிநீமோசம்போனாய்
இடையினில்வருமதஸ்ட்டம் இன்னொருமாதம்போனால்
தடையதுஇல்லைஇல்லை தம்பிசொல்நம்புவாயே.

கருந்தடிமொட்டப்பையன் கட்டையன்குட்டைமூஞ்சி
பெருஞ்சதைபேய்போல்திரேகன் பித்தனும்மொத்தைசூத்தன்
வருந்துயர்கொஞ்சநாளில் வந்திடஅனுபவிப்பான்
மரந்திடுபணத்தைநீதான் மைந்தனேஇனிவராதே.

அவனுக்குசகாயனப்பா அருங்குள்ளன்முட்டக்கண்ணன்
நவமணிதிருட்டுக்குத்தான் நண்டுபோல்உண்டைவாயன்
பவமதுசெய்வான்செய்வான் பாதகன்சகோதரர்க்கு
இனம்சிலநாளைக்குள்ளே எமன்பதிசேருவானே.

ஜோதி:—உனக்கு கடகலக்ணம் வந்தால் உன்னிடத்தில் பணம் வாங்கிக்கொண்டவன் தடியன், மானிரமுள்ளவன், மொட்டையன், நண்டுபோல் உருண்டை முகத்தான், அவனுக்கு சகாயன், குள்ளன், முட்டக்கண்ணன், குடும்பதுரோகி, பங்கில் ஓர்வஞ்சனை செய்பவன். மேற்கூறிய அடையாளம் சரிதானா.

விஜய.—அய்யாசரிதான் பிரியாது என்னவாகும்.

ஜோதிடன்-கவி.

அதிகாரிஉந்தன்மேலே அன்பதுவைப்பான்முன்னே
சதிகாரன்பணம்கைப்பற்றி சரிசெய்வான்ஜட்சிமெண்டு
பரிகாரம்வேறொன்றில்லை பாலனேபயப்படாதே
குரிகாரன்சொன்னவார்த்தை கொஞ்சநாள்பொருத்துபாரே.

பணக்காரசினேகமுண்டு பால்அதிகாரிக்குதான்
குணக்காரன்மேலுன்கோபம் கொள்ளுவான்தினம்நித்தைக்கும்
கணக்காகும்காலம்வந்து கண்ணதுதெரியவில்லை
மணக்கோலம்செய்வார்செய்வார் மன்னனேசிலதுநாளில்.

வ-ம்.—அதிகாரி உன்கேசின் உண்மைதெரிந்து முதலில் நல்ல அபிப்பிராயப்படுவான் பின்னால் உன் எதிரியிடம் சிலதுகை கைபற்றி உனக்கு பிரதிகூலம் செய்வான் அது நீ அறிந்தவுடன் ஆத்திரப்பட்டு அதிகாரியை அடிக்கத்துணிவாய் உன் நெருங்கிய பந்துவாகிய ஒருபெரியோரால் தடையாகும் ஆனால் உன் பேரென்ன.

விஜய.—நம்பி மோசம்போனவன்.

ஜோதி.—ம. மி. மு. மகநக்ஷத்திரம் உன்பேர் இராசிக்கு இன்னும் 2 - மாதம்போனால் அதாவது சனி எ-மிடத்திலிருந்து நீங்குகிறான் சுக்கிரன் ௫-மிடத்திலிருந்து எட்டிபார்க்கிறான். தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தம்பி மார்கழிமீ உ௦வ க்கு உன்னிடம் வருவான். தை பிறந்தால் ஏதாகிலு க்ஷேமத்தை கொடுப்பான். அதுவரை ஊர்பகை. அபஜயம் வரும். அதிகலாபம் வராது.

சேவ:—ஜோதிடரே மகாராஜா அழைத்துவரச்சொன்னார்.

ஜோதி:—இதோ வந்துவிட்டேன். தம்பி மகாராஜாஅழைத்தாராம் போய்வரட்டுமா.

விஜயகம்.—அப்படியே செய்யுங்கள்.

ஜோதி.—மகாராஜா வந்தனம்புரிகின்றேன்.

சந்திரா.—வாரும் ஜோதிடரே நம் குழந்தையாகி சரசலோசனிக்கு ஏதோ புத்திமாராட்டமாய் இருக்கின்றது, அதுகிரகதோஷம் அல்லது பிசாசின்குணம் என செவ்வையாய் தெரிந்து சொல்லும் பிசகினால் சிரசாக்கினை செய்துபோடுவேன்.

ஜோ.—மகாராஜா அப்படியே ஒரு புட்பத்தின்பெயர் சொல்லுங்கள்.

சந்திரா.—செந்தாழம்பூவு.

கவி.

செந்தாழம்புட்பத்தாலே செல்வியின்செருக்கடங்கும்
வெந்தாளேகாமநோயால் வேறொன்றும்இவளுக்கில்லை
நொந்தாளே தினநித்திக்கும் நோய்கொண்டபேயைபோல
குந்தாளேஒரிடத்தில் குறிப்பதுதெரிந்துக்கொள்ளே.

வ-ம்.—ஐயா இப்பெண்ணுக்கு பிடித்தது காமப்பேய் மற்றபேயல்ல இது இன்னும் சிலதுகாலத்தில் நிவர்த்தியாகும். இவள்பேர் இராசி சொல்லுகிறேன் கேளும்.

நொண்டிச்சிந்து.

கமலாபுரிஆளும்-அரசே விமலநருளினு விதைகேளும்
நமதுசெயலொன்றில்லை-ஈசன் நாட்டியதை அளிக்கவரவில்லை
ஏக்கமடையாதீர்-அரசே ஊக்கமதாய்இருந் தால்ஒன்றில்லை
வாக்குஎன்னதைபாரும் - தவறினல் நாக்கையறுத்திடு மெனீரும் சனியிடகுறையாலே - குழந்தைக்கி வினையதுவந்தது வெகுபோதே பனியதுபோல்விலகும் - கவலை இனிகொள வேண்டாமென் னிறையோனே, ஆனிபதினைந்தாச்சு-குருதிசை ஆடி இருபத்தொண்ணில் வருகிறது, வாணியைநாவில்ஜயிக்கும்-கன்னிக்கு காணிக்கைவருகுது மாணிக்கமாய், சுந்தரமதிவதனன்-இவளுக்கு வந்திடுபுருடனே அதிநூதனன், சந்திரன்மயங்கிடுவான்-கண்டு இந்திரன் தானுமே தயங்கிடுவான், வைகாசிபோனலே - இவளுக்கு தைமாசிமாதம்வரைதத்திருக்கு, சையோகம்தன்னைமறந்து-இவளும் ஐயோவென்றே அலைவாள்அறிவிழந்து,சித்திரைவந்தாலே-கன்னியர்நத்திவருகுவள் தனைப்போலே, உத்தமாபேர்இராசி-இதுதான் சத்தியமானதென் கைராசி, சங்கரன்அருள்படிக்கு - உமக்கு இங்கனம்உரைத்தனன் ஒண்டொடிக்கி, திங்களின்முகத்தானே - இனியான் கொங்கநகர்க் கேனு விடைதானே (தன்னேம்-தனனனனு.)

ஜோதி.—மகாரீஜ் குழந்தையின்பேரென்ன.

சந்திரா.—சரசலோசனி.

ஜோதி:—சரி க. ம. ப. இப்பேர் ராசியுள்ள பெண்ணுக்கு சனியனுடைய கொடுமை அதனுல் குடும்பகலகம் உலகநிந்தனை முதலான துன்பம் அடைந்திருப்பாள். இன்னும் அதிகமாகவே அடைவாள். ஆனல் சித்திரை, வைகாசி, ஆனி, ஆனி பதினைந்துபோச்சு ஆடிமீ இருபத்தொன்னில் குருதிசை வருகிறது அப்பொழுது இவளுக்கு விவாகம்கூடும். தங்கள் மனமொத்து நடப்பாள் குடும்பத்தில் மகாபுத்திசாலி என்று நல்ல கியாதி அடைவாள்.

சந்திரா:—ஜோதிடரே இவளுக்கும் விவாகம் நடக்குமா.

ஜோதி:—ஆ! ஆ! இவளுக்கு வாய்க்கும் புருடனே இந்திரன் கண்டு நாணமடையகூடிய சுந்தரம் வாய்ந்தவன் ஆனல் இக்கன்னிக்கு வைகாசிமீ முதல் தைமீ வரை ஓர் தத்து இருக்கிறது அதினுல் பெருந்துயர மடைந்து சித்திரைமீ அதிக சம்பத்தாய் வாழ்வாள் அதன்பின் இவள் ஆயுள்வரை யாதொரு கவலையில்லாமல் சுகமாய் இருப்பாள் உயிர்சேதம்வாாது வயது தொன்னூத்தி ஒன்பதரை அதுவரை புத்திர பௌத்திரருடன் சுகஜீவியாய்வாழ்வாள் மகாராஜ் கொங்குதேசத்தரசன் வரச்சொன்னராம். யான் போகவேண்டியிருப்பதால் விடையளிக்கப் பிரார்த்திக்கிறேன்.

சந்திரா:—மந்திரி ஜோதிடர்க்கு வேண்டியவரை சன்மானம் கொடுத்தனுப்புவாய்.

மந்திரி.—சோதிடரே இதோ களஞ்சியம் வேண்டியவரை எடுத்துப் போம்.

சந்திரா:—மந்திரி ஜோதிடர் ஏதோ அனுகூலமான வார்த்தையை சொல்லிவிட்டார் இருக்கினும் நம்தேசத்தில் அங்காளம்மன் கோவில் பழைய பூசாரி பேய் ஓட்டுவதில் நல்ல சமர்த்தனும் அவனிடத்தில் சரசலோசனியைக் கொண்டுபோய்க் காட்டி அதன் அபிப்பிராயமும் தெரிந்துக்கொள்ளலாம் அழைத்து வருவாய்.

மந்திரி:—அப்படியே.



அங்காளம்மன்

## பூசாலி வருந்துதல்.

முந்திவிநாயகா முருகாமயிலேறும்
கந்தாகடம்பா கரிவதனாவந்திடுவாய்
ஆவுடையம்மானை ஆங்காரக்காளியரே
பாவாடைராயா பக்கத்துணையிருடா
பேச்சிசடைச்சி பெருமதுரைமீனாட்சி
ஆச்சிதுணையெனக்கு அண்டையிலேவந்திடடி
காத்தவராயா கனவீரபத்திரா நீ
மாத்திரந்தான்வந்து மனதிலுதித்திடடா: (பிம் பிம்)

அறுபதாம்படிகருப்பே அணைதாண்டுஞ்செங்கரும்பே
இருபதாம்படியேறி என்னைவந்துகார்த்திடுவாய்
சமயபுரமாரி சங்கரியேஓடிவந்து
அபயமிதுவென்னை ஆதரிக்கபோகாதா
உச்சினிமாகாளி உயர்ந்ததொருகாமாட்சி
லட்சுமியேவந்தென் னிடரதனைநீக்காயோ
வடக்குமலையானே வடமதுரைவீரையனே
இடக்குபுரியாமல் இட்சணம்நீவந்திடுவாய். (பிம் பிம்)

மொட்டைக்கோபுரத்தில் வளர்முனியேஇனிஎனக்கு
நஷ்டப்படுத்தாமல் நல்வாக்களித்திடுவாய்
வெண்ணங்குடிமுனியா வினைதீர்த்தமொண்டிஅய்யா
கண்ணுங்கருத்திருந்தும் காளைக்கிடஏன்வரலை

அங்காளம்மாத்தாயே ஆதரவாய்நீயிருந்து
மங்காமல்என்குரலில் மகிழ்ச்சிகொடுத்திடடி
பச்சிலைகாரி பவளநிறவாயாளே
அச்சமின்றியென்னை ஆதரிக்கவாராயா (பிம் பிம்)

கள்ளஅளகரென்று கனமதுரைவாந்தவரே
உள்ளமகிழ்ந்தெனக்கு உதவிசெய்பவாராபா
தலைவெட்டிமுனியனென்று தடத்திலிருப்பவரே
நல்லரொட்டிசாராயம் நான்தருகிறேன்வந்திடடா
குரும்பர்குலதேவதையே குழந்தைகெப்பேச்சிளனும்
சிரந்தநொருதாயே சீக்கிரம்நீவந்திடுவாய்
சேலம்கணபதிசொல் சிறந்தநொருவரக்கதனை
பாலர்பலமகிழ பக்கதுணை இருப்பாய்
வாக்குசொல்லப்போரேன் வைாவாவந்தெனக்கு
நாக்குதவராமல் நடுவிலிருந்திடுவாய் (பிம் பிம்)

## வாக்கு சொல்லல்.

ஆரடாமக்களாயென் ஆச்சாரவாசலிலே
நேரிவந்துயென்னை நினைந்துபுலம்புரவன்
மாரியிதோவந்து மனதில்நினைநபதடி
கூருகிரேன்கேட்டு குளிர்ந்திடடாவுன்மனதை
கச்சேரிதன்னில் கனத்தவிளக்கிட்டு
அச்சமதாய்நிற்கும் அன்பனேவந்திடடா
நச்சரவம்பூண்ட நாதன் துணைபாலே
சொச்சமும்சொல்லுகிறேன் சுந்தரனேகேட்டிடடா
மானிரத்துமொட்டையன் மந்திரிபவனிடத்தில்
தான்கொடுத்துநீபணமும் தயங்நாாயென்னிடத்தில்
நீ நினைத்ததான்படியே நிமிஷத்தில்செய்திடலாம்
மானிலத்திலுள்ளோர் மதிபார்ஒருக்காலும்
கோரட்டுதாவாகுண முண்டா இல்லைஎன
ஏரெட்டுபார்த்து ஏண்டாமுழிக்கிராய் நீ
சாரட்டுஏறும் சண்டாளதிகாரி
மாரிட்டடித்தாலும் மணம்திரும்பபோரதில்லை
முன்னல்தெரிந்துகொள்வான் முழுவதும்உண்மைஎன.
அன்யாயம்செய்வான் அப்பால்படுபாவி
காரியுமிழ்வார்கள் கண்டார்சிரிப்பார்கள்
பாரிலவனுக்குபவுசு தங்கப்போரதில்லை

பணக்காரசினேகன் பட்டபகல்சோரன்
கணக்காகும்காலம் கடிகிற்றவனுக்கு
கத்திரிக்காயிமுதல் கருணைக்கிழங்குவரை
சொத்தையகப்பட்டாலும் சுற்றுமல்போகானே
பூமணக்கத்தாலிருந்தும் புத்திகெட்டஅம்மடையன்
கோமணத்தின்கீழ்னுழைய கொஞ்சமுர்தான்அஞ்சிடனே
அதிகாரகர்வம் அவனுக்குவர்ததினல்
மதியாமல்பேசிடுவான் மன்னன்னடுத்தோரை
பணம்போச்சுதென்று பாரில்மனக்கவலே
குணமாககொள்ளாதே குற்றமொன்றும்வாரதில்லே
தெய்வக்குறைவுனச்கு தென்தேசத்திலிருக்கு
கைவருந்தியேனும் கட்டாயம்செய்திடதை
மெய்வருத்தமுண்டு மேதினியில்தைபிறந்தால்
கைதொட்டதெல்லாம் கடிகிமுடிந்துவிடும்

சேவ.—ஓய் பூசாலி உம்மை எங்கள் மகாராஜா அழைத்துவரச் சொன்னர்.

பூசாலி.—இதோவருகிறேன். மகாராஜா நமஸ்கரிக்கின்றேன்.

சந்திரா:—ஏ பூசாலி என் குழந்தையாகிய சரசலோசனிக்கு பேய் பிடித்திருக்கிறதாம் நீபோய்பார்த்து சௌக்கியபடுத்திவிட்டால் அப்பெண்ணை உனக்கு விவாகம்புரிந்து இவ்விராஜ்ஜியத்தை மகுடாபிஷேகம் புனைந்துவிடுவேன் இல்லாவிட்டால் உன் சிரசை கண்டித்துவிடுவேன் என்ன சொல்கிருய்.

பூசாலி.—மகாராஜா எப்பேற்கொத்த காட்டேரி, இருசி, மாடன், குள்ளன், செந்தலேமுனி, கருந்தலேப்பூதம், மாரி, வீரி முதலான துஷ்டதேவதை எதுவானுலும் என்பேரைக் கேட்டவுடன் ஓடிவிடும். ஆனல் தாங்கள் சொன்னசொல் தவறிவிடுவீர்கள் என்ற சந்தேகம் பாதிக்கிறது.

சந்திரா.—அடா நான் சொன்னசொல் தவறேன் இது சத்யம் காவலா பூசாலியை என் அந்தப்புறத்தில் குழந்தை இருக்கும் இடம் காட்டுவாய்.

பூசாலி:—ஐயோ தெரியாமல் அகப்பட்டுக் கொண்டேனே. இவளே பார்த்த மாத்திரத்தில் பேய்குணம் தோன்ற வில்லேயே அன்யாயமாய் சாகப்போகின்றேனே. தெய்வமே.

(தந்தினத் தான தின தந்தின என்னும் வர்ணமெட்டு.)

ஆளேமிரட்டிநானும் தெய்வமே என்
காலங்கழித்துவந்தேன் தெய்வமே என்

நாளுங்குரிகிபோச்சி தெய்வமே இப்
பாலன்யான்என்னசெய்வேன் தெய்வமே என்
சாணுவயர்வளர்க்க தெய்வமே நான்
ஆணுவங்கொண்டிருந்தேன் தெய்வமே இப்போ
காணேன்உபாயமொன்றும் தெய்வே நான்
விணேசாகப்போரேனே தெய்வமே

பூசாலி.—ஐயா நான் வேண்டாம் வேண்டாமென்று சொல்லியும் பாவிமக்கள் எனக்கு கல்யாணம் செய்தார்களே.

பெண்டாட்டிகட்டிநானும் தெய்வமே இப்போ
ரெண்டேதான்மாதமாச்சு தெய்வமே அவ
கொண்டாட்டமாகவேதான் தெய்மே மூளி
கண்டவனோடேபோவா தெய்வமே
ஆசைகொண்டிடநீஎந்தன் தந்தையே இப்
பிசாசைமாலேயிட்டீரென் தந்தையே இப்
பூசாலிதன்மும்போய் தந்தையே நான்
காசாசையாலேசெத்தேன் தந்தையே இச்
சேலம்பண திதான் தெய்வமே அவர்
சீசிபோகாதேஎன்றூர் தெய்வமே அப்
பாலன்பேச்சைக்கேளாமல் தெய்மே இப்
பாதகன்யான்மாட்டிக்கிட்டேன் தெய்வமே தந்தான

சேவ.—மகாராஜ் பூசாலி சரசலோசனியை கண்டமாத்திரத்தில் தன்னால் ஆகவில்லை என்று ஓடிவந்துவிட்டான்.

சந்திரா.—சிரசாக்கினை செய்துவிடுவாய்.

## சரசலோசனி.

### இராகம் - பியாக்.

ஆர்போய் சொல்லுவார் என்
மதனதுரைக்கு இதை (ஆர்)

தேடற்கரியதந்தை சிரைதனில்வைத்ததும்
பாடும்பூசாலிவந்து பலபேயென்றுரைத்ததும்
ஆடும்பூதமேஎன்று அடஞ்சாதித்தடித்ததும்
மாடும்ஆடும்மெனவே மன்னவர்மதித்ததும் (ஆர்)

அனேகஅரசர்வந்து அவர்தலேகொடுத்ததும்
அரும்பாவிஎந்தனாலே வெகுபேர்கள்மரித்ததும்
சினேகர்அனேகர்எனனே சிந்தையில்வெருத்ததும்
சிறுவன்கணேசன்பதம் தினம்தினம்படித்ததும் (ஆர்)

## போதுவசனம்.

சரசலோசனி காமஉபாதையால் வாடி வதங்கி தன்னம் தனிமையாய் சோகமுற்றிருக்கும் காலத்தில் இவளுடைய பால்யசிநேகனை வித்யாரத்னன் என்னும் தாதிபுத்திரன் தேச சஞ்சாரியாய் சென்று தன் நாடடைந்து தன் தோழமையாகிய சரசலோசனிக்கு பேய்பிடித்ததென்றும் அப்பேய் ஓட்டாவிடில் அவர்களை சிரசாக்கினை செய்வதென்று ஓட்டிவிட்டால் சரசலோசனியை மணம் செய்து கொடுப்பதென தீர்மானித்திருப்பதாய் கேள்வியுற்று தன் தாயாரால்மாருவேடம்பூண்டு அரசபுத்திரியின் அந்தப்புரம்சென்று அவளின் க்ஷேமத்தை விசாரிக்க சரசலோசனி கூறலுற்றாள்.

### சரசலோசனி.

#### அகவல்.

அன்புருந்தோழா அரைகுவேன்கேளாய்
என்பெருந்துயரை இனிமையாயுனக்கு
அன்னலாமெந்தன் அருந்தந்தைவந்து
மன்னராரேனும் மணந்திடச்சொன்னார்
பாவிசண்டாளி பாதகித்துரோகி
கோபமாய்சினம் கொண்டனன்யானும்
ஆவிபதைத்திட ஆங்காரங்கொண்டு
காவலில்வைத்து கடுந்துயர்புரிந்தனர்

**வித்யா**:—ஆ கா பின்னால் என்ன நேர்ந்தது

தாங்காச்சோப தளர்ச்சியால்யானும்
தூங்கும்போது துயரொன்றும்காணேன்
கங்கையைத்தரித்த கடவுளின்அருளால்
இங்கனம்வந்த இயல்புள்ளதோளா
மாச்சிமைதங்கிய மற்றோர்நகரில்
ஆசசியின்அருளால் அங்குநானிருந்தேன்
காச்சியைசொல்ல கர்த்தனால்முடியா
சூச்சியாய்சொல்வதை சுந்தராகேளாய்

**வித்யா**:—அடடா என்ன பரிதாபம்.

கன்னியர்கேத்த காளையங்கொருவர்
நன்னயமாகஓர் நாயகன்தூங்கினர்
மன்னவனபூகை மங்கையானுரைக்க
என்னொருநாவு இடங்கொடுக்காதே

கண்டனன்யானும் காதலங்குற்றேன்
தொண்டையும்வரள தோகையான்கதறி
மண்டியிட்டவரை என்மார்புரத்தழுவி
அண்டையிர்சாய்ந்தபின் அரிந்திலேன்நினைவு

வித்யா:—ஐயோ உனக்கும் இவ்விதி வாய்த்தனவா.

தோகையான்கண்டிபா தூக்கமதன்று
மாய்கையால்வந்து மயக்கினதென்னை
ஆகையால்யானும் அயர்ந்து தூங்கினன்
சாகையில்வந்து சயனித்திருந்தேன்
விடிந்தபின்எழுந்தால் வேந்தரைகாணேன்
அடர்ந்து அடர்ந்துயான் அலரிப்புலம்பினேன்
நடந்ததுசூதென நாயகிநானிம்
மடந்தைதாதியை மாட்டினேன்சாட்டையால்

வித்யா:—அவர்கள்செய்த பாவமா பின்னால்.

விண்ணினில்தேடினேன் மண்ணினில்தேடினேன்வேல்விழி
யாமென்கண்ணினில்தேடியும் காளையைக்காண்கிலேன்
எண்ணினேன்நானும் என்தந்தையின்சூதென
பண்ணினேன்யோசனை பலபலவாக
நீர்சொரிந்திடவே நிலத்தினில்பிரண்டு
மாரினில்அடித்து மயங்கிநான்வீழ்ந்தேன்
தாதிகள்பயந்து ஓதினர்தந்தைபால்
சேதிகேட்டவுடன் சினத்துஎன்தந்தை

வித்யா.—அம்மணி உனக்கும் இத்துன்பம் வாய்த்ததா.

சோதிடர்தன்னை சுருக்கினில்அழைத்து
ஓதிடஅவரும் உரைத்தனர்பலவாய்
காசாசைகொண்ட பூசாலிவந்து
நேசியாமெனக்கு நேமித்தான்பேயென
ஆவேசம்கொண்டு அடித்தனன்எந்தனை
சாவேன்சாவேன்என்று சப்தமதிட்டேன்
தந்தையும்கேட்டு தளர்ந்துஅவர்மனம்
வந்தபூசாலியை வாளினால்அருத்து
எந்தையும்எந்தனை யிட்டார்ஜெயிலினில்
விந்தைதானப்பா விளம்பினேன்கேட்டுன்
சிந்தையில்தோன்றுவார் செய்திடுவாயே.

68175

## வித்யாரத்னன்.

(பாலா என்னகாலம் என்ற வர்ணமெட்டு.)

ஈசன்உனக் கிவ்விதியும் விதித்தானோ ஈதேனோ
தாசன்அடியார்மேல் பாசமதுள்ளவென்
நேசன்உன்மேல் விசுவாசமதில்லாமல் (ஈசன்)

ஐயோஉனக் கித்துயர்வரவும் ஆச்சே வீண்எச்சே
அன்னைஎனக்குநீ மண்ணில்துயருறகண்ணில்
யான்பார்த்துமே இன்னுமிருக்கவோ (ஈசன்)

தாயேபோக விடையெனக்குதருவாயே ஏநீயே
தங்கப்பிரகாசமுன் அங்கமும்தளர்ந்து
மங்கையேவாடாதே சிங்கம்யான்போய்வாரேன் (ஈசன்)

(போற்றிசெய்தேன் ஐயா உன்னை என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

போய்வருவேன் தாயேயானும் போய்வருவேன்

அநுபல்லவி.

புகலும்வடதிசைநாடியே நவிலும்பலஇடமோடியே (போய்)

சரணங்கள்.

திண்ணமநலியுர மண்ணுலகமெல்லாம்
தேடியேபார்த்து யான்வாரேன் என்
எண்ணம்முடியாமல் பெண்ணரசிபோனல்
இங்குதிரும்பாமல் போரேன்

இதுஉண்மைஎன் றறிவாய்நீயே
இனிபார்த்திடேன் மறுவேலையே
சரிசெய்புரேன் உன்வேலையே
கிருபாகரன் அருளாலயே (போய்)

கொங்குகலிங்க மராஸ்டமதெங்கினும்
கோதையரே பார்ப்பேன்யானே அவர்
அங்குமில்லாவிட்டால் சிங்களம்செங்குளம்
தங்கியேதேடுவேன் தானே

தயங்காதிரு தாயேஇனி
மயங்காதிரு மனமீதினி
செயங்கொண்டுநான் வருவேன் துனி
பயங்கொண்டிட வேண்டாமினி (போய்)

வித்யா:—நாமோ ஒவ்வொரு தேசங்களிலும் சுற்றிப் பார்த்தும் நாம் நாடிவந்த காரியங்கள் ஒன்றும் முடிவாகவில்லை இப்பொழுதோ வித்யாபுரி என்னும் நகரில்வந்து இருக்கிறோம் இன்னகா அரசபுத்திரனுக்கு புத்தி மாறாட்டமாய் விட்டதென்றும் அதை சொஸ்தப் படுத்துவோர்க்கு இராச்சியத்தில் பகுதி பங்கிட்டுகொடுப்பதென்றும் இராஜா உரைத்திருப்பதாய் இவ்வூர் பிரஜைகளால் கேள்வியுற்றோம் ஆகையால் ஈசன்செயல் எப்படியோ இருக்கட்டும் முதலில் அரசபுத்திரன் இருக்கிற காராக்கிரகம் செல்லுவோம். ஆரடா இவ்விடத்திற் சேவகன்.

சேவகன்:—ஆரய்யா தாங்கள்.

வித்யா:—அடா நான் ஓர்சஞ்சாரி நீ உன் அரசபுத்திரனாகிய விரதபூஷணனிடத்தில் யாரோ ஓர் யாத்திரைவாசி கமலாபுரி என்னும் நகரத்தில் இருந்து வந்திருப்பதாய் தெரிவி அதற்கவர் கொடுக்கும் மறுமொழியை வந்துரைசெய்குவாய்.

சேவகன்:—அரசே யாரோ ஓர் யாத்திரைவாசி துவாரத்தின் கண் நின்றுகொண்டு தங்களை பார்க்கவேண்டு மென்கிறார்.

விரத:—அடா சேவகா யாராயினும் விட்டுவிடுவாய்.

சேவகன்:—ஐயா உத்திரவாய்விட்டது செல்வீர்.

விரத:—அடி சரசலோசனி அடி சரசலோசனி.

வித்யா:—அடடா நாம்வந்தகாரியம்முடியும்வேளை இதுதான் இதுதான் இன்றுதான் என்ஜென்மம் ஈடேறும்நாள் ஏ இராஜபுத்திரா உன் வியாதிக்கு மருந்துகொண்டு வந்திருக்கிறேன் எழுந்திரு எழுந்திரு இன்றுடன் உன்கவலை ஒழிந்தது ஆ ஹா நாம் தேடிய மன்மதன் இவன்தான் சந்தேகமில்லை இராஜபுத்திரி கெதிகொண்ட காரணத்தினனாய்தான் இருக்கின்றான் நம் காரியம் சித்தியாய்விட்டது விரதபூஷணா எழுந்திரு.

விரத:—யாரய்யா எனக்கு நீர்தானா மருந்துகொடுப்பவர் என் வியாதிக்கு சரசலோசனி என்னும் கிளியின் இதன் அமுர்தம்கொணர்ந்து அவிழ்தமாய் கொடுத்தால் எழுந்திருப்பேன் இல்லையாயின் என்னாவி எமலோக பிராப்த்திதான்.

வித்யா:—ஹே ராஜகுமாரகா நீ கோரிய அவிழ்தமே கொண்டு வந்திருக்கிறேன் எழுந்திரு.

விரத:—எங்கே எங்கே கொடும்பார்ப்போம்.

வித்யா:—சரசலோசனி கொடுத்த கணையாழியை கொடுப்போம். ஏ ராஜபுத்திரா இந்த கணையாழி யாருடையது பாரும்.

விரத:—ஐயா என்னுடையதுதான் இக்கணையாழியை நாம்கோரும் மங்கையாகிய சரசலோசனிக்கு அல்லவா அணிந்திருந்தோம் ஆதலால் இவர்கொண்டுவந்தது ஆச்சரியம் இவரால்தாம் நம் நோரிக்கை நிவர்த்தியாகும்.

விரதபூஷணன்.

இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

எதோகாட்டுவாய் யான்தேடுமோனை
எதோகாட்டுவாய்

அநுபல்லவி.

வதைபுரியாதிச் சமயமெந்தனை
துதிபுரிகுவேன் துணைவாவுந்தனை
தோகைக்கினை லோகத்தினில் எதித்தனை ரூபத்தவள் (எதோ)

தங்கநிறமேனி மங்கையைகாட்டுவாய்
தயங்கிவாடுரேன் மாரனைவோட்டுவாய்
தாகத்தொடு மோகக்கணை தேகத்திலே போகிக்கிது (எதோ)

பாதகிகாமத் துயரமதைதந்தே
பாவிபோனவிட காணுமலேநொந்தேன்
பழிகாரனே தெளிவாகவே உரையாதிருப்பதுஞாயமா (எதோ)

பேதகம்எண்ணி அம்மாதுகலங்குவாள்
பேய்க்குணம்செய்தோமென் றெண்ணிபுலம்புவாள்
பெண்ணுமவள் கண்ணென்மனம் புண்ணுக்கியே என்னுளோ (எ)

ஆவிடதைக்குதுஐயோ நான்யென்செய்வேன்
தேவியைகூட்டி தெரிசனம்தாராயா
கமலத்திரு வதனத்திலே முகம்வைத்துயான் சுசமுற்றிட (எ)

வித்யா.—ஐயோ இவர் ரொம்பவும் காமபாதைபட்டு தளர்ந்தவராய் இருக்கிறார். ஆதலால் இவரை அதிக துன்பப்படுத்தப்படாது ஏ ராஜபுத்திரா அவசரப்படாதே சற்று கவனி கமலாபுரிஎன்னும்நகரில் சந்திராயுதன்என்னும்அரசனுக்கு ஓர்பெண் குழந்தை அது உனைவிட பதின்மடங்கு காமஉபாதையால் எப்பொழுதும் ஏ விரதபூஷணா ஏ விரதபூஷணா என்னும் சப்தமிட்டு புத்தி விகாரங்கொண்டிருக்கிறாள் அதற்காய் அவள் தந்தை தன் குமாரத்தியின் பித்தம் எவன் நீக்குகின்றானோ அவனுக்கே அப்பெண்ணை விவாகம்புரிவதுமன்றி இவ்வரசா

ட்சியையும் மகுடம்புனைந்து வைப்பேனென்றும் சௌக்கியப் படுத்தாவிடில் சிரசாக்கினை செய்துவிடுவேன் என்றும் பிரதிக்கினை செய்துக்கொண்டிருக்கிறான் அதனால் அநேக அரசர்கள் தலை அற்றுவிட்டது. நீ ஓமாந்திரிகவாதி வேடம்புனைந்து அவ்வரசனால் உன் காரியாதிகளை சித்திபெற்றுக்கொண்டு சுகப்படுவாய் நான் போய்வருகின்றேன்.

வி த.—நாமோ இதுவரை காமபாதைபட்டு துன்பத்தில் ஆழ்ந்திக்கிடந்தோம் இப்பொழுது இம்புண்ணியசீலனாகிய உத்தமபுருடனால் அதின் தாத்பர்யம் தெரிந்துக்கொண்டோம் இனியிவிடத்தில் தாமப்பதில் என்ன பிரயோஜனம் புறப்படுவதே சரி நானோ இப்பொழுது கவலாபுரி வந்துவிட்டேன் இதுதான் அரசன் மாளிகையாய் தோன்றுகிறது முன்னால் நம்தோழன் சொல்லியவாறே வரைப்பட்டிருக்கிறதுயாரடா இவ்விடத்திய காவலன்.

காவலன்.—யாரய்யா தாங்கள்.

விரத.—நான் ஓர் மந்திரவாதி அரசனிடத்தில் யான் வந்திருப்பதாய் தெரிவி

காவ.—மகாராஜா யாரோ ஓர் மந்திரவாதி வந்திருக்கிறார்.

சந்திரா.—உடனே விட்டுவிடுவாய்.

விரத.—மாந்திரிகன் வந்தனம் புரிகின்றேன்.

சந்திரா.—அடடா இவனை பார்த்தமாத்திரத்தில் என்மனம் பரிதாபத்துக்கு இடங்கொடுக்கின்றதே ஐயோ என்னசுந்தரம் என்னகெம்பீரம் அடாகுழந்தாய் நீயோ இளம்பருவமுடையவன் என் குழந்தையின் ஆவலால் உயிரிழந்தவர் கோடானுகோடி நீயோ மகா உத்தமனாயும் அழகுவாய்ந்தவனாயும் இருக்கிறாய் உன் உயிரை வீணில் போக்குகவேண்டாம் என்னிடத்திலேயே இரு உனக்குவேண்டியவரை சன்மானங்கொடுக்கின்றேன் இந்த அரசாட்சியையும் உனக்கு பட்டாபிஷேகம் செய்துவைக்கிறேன் என்ன சொல்கிறாய்.

விரத.—மகாராஜ் என்னை அர்ப்பமாய் நினையாதீர் என்சப்தம்கேட்டு பறந்தபேய்கள் கோடானுகோடி என்பேர்கேட்டு ஓடினபேய்கள் கோடானுகோடி யான் வருவதாய்தெரிந்து ஓடும்பேய்கள் கோடானுகோடி இந்தக்ஷணம் நான் உள்பிரவேசித்து நான் வந்திருப்பதாய்தெரிவிக்கிறேன் உடனே அவளைபிடித்த பேய்கள் எல்லாம் பறந்துவிடுகின்றதை பாருங்கள்.

சந்திரா.—ஏ ஜெகதீசா இப்பாலயனுக்காவது இரங்கி அருள் செய்வாய் ஆனல் செல்வாயப்பா.

விரத.—அடா காவலனே எங்கனம் ராஜபுத்திரி.

காவலன்.—இதோ மகாராஜ்.

சரசலோசனி.—அடா என் துரையே இத்தனைநாள் சென்றதா.

(பட்டாபிஷேகம் என்ற-வர்ணமெட்டு.)

சரச-கண்டுமகிழ்ந்து கலவிசெய்யாமலே
தொண்டுபுரிந்துஉன் அண்டையில்தூங்கின
தோஷம்வேறில்லையடா அடா துரையே
பாசம்விடலையடா
தோகைஉன்னல்தேககஷ்டம்
சாகைதன்னில்பட்டனளன் அடடா

விரத-மானேஉனைக்கண்டு மன்னன்பட்டதுயர்
தேனேஉரைத்தாலே திங்களாருஞ்செல்லும்
கானகம்பற்றுமடி என்மானே
கல்லும்உருகுமடி
ஏனின்னமும்போனதெல்லாம்
நீநினைந்துவீணில்கலங்குகின்றாய்

சரச-கண்ணுக்குள்ளேஉள்ளகண்மணியேயடா
பெண்ணாள்பட்டதுயர் கன்னிநாவில்சொல்ல
என்னுலுமாகாதடா என் துரையே
சொன்னலுமாறுதடா
ஏந்திழையாள்வாழ்ந்ததெல்லாம்
தாழ்ந்திருந்தமாந்தர்சிரித்தனரே

விரத-சோலையிளங்குயில் மாமயிலேஅடி
சொன்னவர்என்னலும் சுகமேயடையட்டும்
சோராதேஎன்கிளியே என்மானே
தவறாய்சேன்மொழியே
சோகமுறவேண்டாமினி
மோகமதின்தாகம்சகிக்கேனினி

பொது-வசனம்.

இதை கேள்வியுற்றவுடனே அரசன்மகிழ்ந்து 56-தேசத்தரசர்களையும் வரவழைத்து வெகு ஆடம்பரத்துடன் சரசலோசனிக்கும்



## விரதபூஷணன் சரசலோசனி வித்யாபுரிக்கேகுதல்.

விரதபூஷணனுக்கும் கல்யாணமுடித்து மகிழ்ந்திருக்குங்கால் விரதபூஷணன் தன்சொந்த நகராகிய வித்யாபுரிபோய்தன் தந்தையைப் பார்க்க அவாக்கொண்டு தன் மனைவியிடம் தெரிவிக்க அவளும் சம்மதித்து தன் பிதாவுடன் வுரைத்து தண்டு தளத்துடன் புறப்பட்டு ஓர் ஆற்று அருகில்வந்து டேரா அடித்து இருக்கையில் இரவு அர்த்த சாமத்தில் ஆற்றில் வெள்ளம்வந்து இவர்கள் இருவரையும் அடித்துக் கொண்டுபோய் சரசலோசனியை ஓர்கரையில் ஒதுக்க அவள் கரையேறி துக்கித்து இருக்குந்தருணம் சண்டன்யெனும் ஓர்வேடன்வந்து வர்ப்புருத்தும் விதங்காண்க.

வேடன் வசனம்.—நாம் வேட்டையாடிவந்த தருணத்தில் இவ்விடத்தில் யாரோ ஓர் அழகியமதிமுகம் வாய்ந்தபெண் இருக்கின்றாள் அருகில்சென்று விசாரிப்போம்.



வேடன்.



சரசலோசனி.

(கொஞ்சம் தயவுசெய்யடி என்ற-வர்ணமெட்டு.)

கொஞ்சும்கிளிமொழியே ரஞ்சிதம்நீபாரடி
கொண்டவன்பேரதென்னடி
குயிலேமயிலே கோகிலமேநல்ல
ரத்துமுலேயுடன் இத்ததிவந்தவள் (கொ)

மாரன்விடுங்கணை என்மாரைப் பிளக்குது
மயிலேமருசஏன்தடை
மட்டற்றபொன்னதை கொட்டித்தருகிறேன்
அட்டிசெய்யாமலே சட்டெனச்சேரடி. (கொ)

மருவும்மருக்கொழுந்துமல்லிகைப் பூதாரேன்யான்
மாமயிலேநீஓடிவா
மஞ்சத்தில்உந்தனை கொஞ்சிசுகித்திட
அஞ்சுகமேதயை நெஞ்சத்தில்வையடி. (கொ)

மயிலாப்பூர்மஞ்சளதுகுயிலே தருகிறேன்
ஓயிலாகஎன்னைசேரடி
மத்தகமொத்த தனத்தியரேஎன்னை
இத்ததிவந்துநீ முத்தமுதாவடி (கொ)

பட்டுபாவாடைதாரேன்பதக்கத்து முத்துதாரேன்
கட்டியணையவாடிநீ
காதலினாலேயே மாதேயான்வாடுரேன்
வாதுபுரியாதே தீததுநேர்ந்திடும். (கொ)

பல்லவி.

வேண்டாயடாவேடாளனை தீண்டாதே நீபோடா

அநுபல்லவி.

ஏண்டாஉனக்கிப்புத்தி வேண்டாமடாயிய்யுக்தி
தீண்டாநெருப்பின்சக்தி மாண்டால்தெரியும்பக்தி (வேண்)

சரணங்கள்.

வளர்த்திபவார்த்தைகள் படியாதே கனல்
ஒளிக்கமுந்தானையால் முடியாதே என்னை
இளக்காரமாய்கிட்டே துடியாதே எரி
விளக்கினில்பூச்சிபோல் மடியாதேயடா-(வேண்)

தாயிஉனக்கென்மனம் எரியாதோ போடா
பேயேஇம்மாத்திரம் தெரியாதோ என்னை
தீயுரைசொன்ன கெரியாதோ உன்
வாயில்புழுபுழுத்து சொரியாதோ அடா-(வேண்)

(கொஞ்சம் தயவுசெய்யடி என்ற-வர்ணமெட்டு)

புழுவுபுழுத்துயானும்அழிவிச் செத்தாலுமே
தழுவாமல்போகோனடி
புத்திமயங்கிது சித்னிஎந்தனை
முத்தங்கொடுத்துநீ இத்தநிசேர்ந்திடு (கொ)

மண்டையுடைத்துஎன்னைஇரண்டாய் செய்தாலுமுன்னை
கொண்டுபோகாமற்போகேனே
கொத்துவடத்துடன் முத்துசரமது
நித்தம்கொடுத்துஉன் பக்தன்பணியுரேன் (கொ)

## வேடன் - தெம்மாங்கு.

சந்தணச்சோலையிலே சாயங்கிரவேளையிலே
சொந்தமனையாளைப்போல் சோடிசேரயென்னதடை
தங்கம்-விலைமதிக்கும்-நங்கம்-இச்
சிங்கம்-உன்னாலடைந்தேன்-பங்கம்

சரச.-காட்டில்வசிப்பவனே கனவேடசாதியனே
வேட்டைதொழிலைவிட்டு லேடிக்கைசெய்யுராய் நீ
வேடா-துடாராதேநீ-போடாநீ
ஈடா-எனக்குசரியோடா

வேட-கண்ணே உனையும்விடேன் காதலியே அன்னம்தொடேன்
பெண்ணே உனைப்பிரிந்தால் பேதலிக்குளென்மனது
பேதைசுகம்-வருமிப்போதே நீ
வாதே-புரியாதே-என்சோதே

சரச.-பத்துதலைராவணனும் பாவியிவன்மக்களுடன்
சித்தம்கலங்கிசெத்தான் ஸ்ரீராமன்தேவியாலே
சிந்தைதனில்-நினையாநிந்தை-இ
விந்தை-கேட்டாலுன்-தலைபந்தே

வேட-உயிர்போனல்போகுதடி உத்தமியேஉந்தனாலே
மருவியணைந்திடாது மதியிழக்கேன்ராட்சதர்போல்
மங்கைஉனது-இருகொங்கை-எ
நங்கை-தீண்டினலாமோ-சங்கை

சரச.-இரணியாக்கதனும் இருத்தைமுககீசகனும்
குருநாதனருள்பொராது கொண்டானாகம்கெதி
மூடாதருமா-தொடவேடா-நீ
போடா-பொல்லாங்குவரும்-கேடா

வேட-புத்திகெட்டமடையனைப்போல் பூதலத்திலெண்ணினாய்
முத்தங்கொடுத்திடடி மோகஞ்சகிக்கேனினி
மோடிசெய்-யாதேகிட்டேவாடி-நாம்
கூடி-விளையாடலாம்-லேடி

சரச.-படித்தபடிப்பையெல்லாம் பாவிஇவன்கேட்டிலனே
அடுத்துக்கெடுப்பதென அடைந்தேனிவனிடத்தில்
ஆதிஅஷ்டாட்-சரத்தைஓதி-அ
நீதிமாந்-தடைவேன்-கியாதி

சரசலோ:—ஆ ஜெகதீசா இன்னும் என் துன்பம் என்னைவிட்டு நீங்க வில்லையா. இதுவரை யான்பட்டதுபோதாதா.

## கடவுள் வணக்கம்.

படமுடியாதினித்துயரம் பாமுடியாதரசே
பட்டதெல்லாம்போதுமிந்த பயந்தீர்த்தெப்பொழுதுன்
னுடலுயிராதியதெல்லாம் நீஎடுத்துக்கொண்டுன்
னுடலுயிராதிஎல்லா முவந்தெனக்கேஅளிப்பாய்
வடநூர்சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுள்மணியே
என்குருமணியே மாணிக்கமணியே
நடன்சிகாமணியே என் நவமணியே நன்மணியே
பொன்மணியே நடராஜமணியே.

முத்திநெறியறியாத மூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள்பாரும்வண்ணஞ்
சித்தமலமறிவித்துச் சிவமாக்கிஎனையாண்ட
அத்தனெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

நெறியல்லாநெறிதன்னை நெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமே திருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாத கூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவா றார்பெறுவாரச்சோவே.

மண்ணதனிற்பிறந்தெய்த்து மாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளி யெனையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத் தூய்நெறியேசேருவண்ண
மண்ணலெனக்கருளியவா றார்பெறுவாரச்சோவே.

சரசலோ:—ஆஹா என்னகஷ்டம் நாம் இவனிடம் கடிந்து வார்த்தையிடில் விடான் இவனை எப்படியும் நயமாய் வேலைமுடிப்பதுதான் சாகசம். அப்பா நானோ பர்வதராஜபுரத்தில் ஓர் தனவானை மாலையிட்டேன் அவர் காலம் சென்றுவிட்டார். எனக்கு வேறு திக்குகிடையாது என்விதியைநினைந்து புலம்பிக்கொண்டு இருக்கும் தருணத்தில் தெய்வசங்கற்பத்தால் தாம் இவடத்தில் வந்து பிராப்தமானீர் உம்மைவிட எனக்கு இங்கு துணைவேறில்லை யானோ அநாஸ்திரீயாய் விட்டேன் என்னை நீர் தீண்டபோகாது. உம்முடைய கிரகத்துச்குச் செல்வோம் வாரும்.

பொதுவசனம்.

இவர்கள் ஒத்துப்போகும் தருணத்தில் ஆர் ஒன்று தடைபட்டு ஜலப்பிரவாகம் அதிகமானதால் அவிடத்தில் ஓர் ஓடக்காரன் ஓடம் ஓட்டிக்கொண்டு வரும் விதங்காண்க.

ஓடக்காரன் வருதல்.

ஏலேலோ ஏலலலோ-ஏலல்லோ ஏலலோ

| | | |
|---|---|---|
| கள்குடித்து | ஏலேலோ | கண்சிவந்து |
| காலைபின்னி | ஏலேலோ | நடைநடந்து |
| அக்கிரமம் | ஏலேலோ | தான்புரிந்து |
| அவதிபட்டு | ஏலேலோ | இவர்தளர்ந்து |
| நிக்கும்வகை | ஏலேலோ | உலகறிந்து |
| நிலைமயில்தான் | ஏலேலோ | நிற்குவண்ணம் |
| பக்குவமாய் | ஏலேலோ | எடுத்துரைக்க |
| பரமசிவன் | ஏலேலோ | பதம்துணையே |

முடுகு.

ஊரில்குடித்திடும் உத்தமானேகம்
நேரில்யான்பார்த்தவளா நிகழ்த்துவேன்கேளும்
சாதியிலுயர்ந்திட்ட சமர்த்தர்அநேகர்
இயாதியதடைந்திட்ட செம்பிரவீரர்
முக்காடுபோட்டுமே மூளிபோல்போவார்
அக்கேடுநீங்கிடும் அங்குநுழைந்தாலே
தலைமாவதாகவே அரையணுகொடுப்பார்
நிலைதவரிடாமலே நிமிசங்குடிப்பார்
வாயினில்வைத்துமே முகத்தைசுளிப்பார்
வாந்திக்குவரும்போ லகத்தைநெளிப்பார்
இத்தனைகேட்டுடன் இதுசென்றவுடனே
இந்தாரும்ரூபாய் ஓர்புட்டிபோடென்பார்
முக்காட்டைநீக்கியே முழுதுமேகுடிப்பார்
முடிவானவுடனேயே சங்கீதம்வைப்பார்
கைத்தாளமிருதங்கம் தம்பூரமடிப்பார்
கண்டபடிவாயினால் வந்தபடிவைவார்
இங்கிலீஷ்கன்னடம் இந்துஸ்தான்மொழிவார்
இதமானபிரஞ்சுடன் பலபாஷைபேசுவார்
டிராமாவைகடையினில் நடத்தியேகாண்பிப்பார்
கால்மாடுதெரியாமல் தலைகீழாய்வீழ்வார்
தள்ளாடிதட்டியே எட்டியடிவைப்பார்
தடுமாறிகீழ்விழ்ந்து கால்தனையுதைப்பார்
அல்லோகல்லோலமாய் அவமானம்விட்டு
அன்பானசினேகரால் உதைரொம்பபட்டு
காலையிலெழுந்துமே என்செய்தேனென்பார்
கடைவீதியிலுள்ளோர்கள் அறிவாரோவென்பார்
மட்டற்றதிரவியம் மலைபோலிருந்தும்
மதிப்போகுடியினால் தினம்தினம்குன்றும்
பலபலயிடஞ்சலும் இதுதேடிவைக்கும்
பந்துகாணுவிலே நம்மையும்பார்க்கும்
ஆதலாலினிமேலே லாகிரிசெய்யாமல்
அன்பர்காள்சத்விஷயம் தன்னில்உனமென்மேல்
பாதகமென்பது பக்கத்தணுகாது
பரமனுடஅருளது எண்ணுங்குறையாது
கணபதியுரைத்திட்ட சொல்லைநீகேளு
கவலையைஒழித்துமே வாழுமென்றாளும்

ஏலேலோ ஏலேலோ-ஏலலோ ஏலல்லோ

பொது - வசனம்.

வேடனும் சரசலோசனியும் ஓடத்தேறி அக்கரையில் இரங்கினவுடன் வச்சிராயுதன் என்னும் அரசன் சரசலோசனியைக் சண்டு மயங்கிவேடுவனை கொன்றுவிட்டு இவளைவர்ணித்தல்.



சரசலோசனி. வச்சிராயுதன்.

## வச்சிராயுதன் வர்ணித்தல்.

(ஆசையுண்டாகத்தடையா என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

அழகேதிரண்டுருண்டதேனே உலகிலென்னை
மருவியணையவந்த மானே

அநுபல்லவி.

அதிரூபமதிமுகம்படைத்த இம்மானின்
ததிஎனபதத்தினில் விழுவனேயானும் (அழகே)

சரணங்கள்.

உலகத்தைதவிலைபெற்ற நவரத்னமதுவைத்த
உத்தமியிவள்கம்மல் இவள்கழுத்தில்
நலமுத்துதனைவைத்து அகிலத்தில்பதிப்பித்த
நற்பொன்னதின்மின்னல் இவள்மார்பினில்

மலையொத்தஸ்தனமதின் விலைபெற்றகச்ச
மதிப்பிடஇனிஎன்னால் முடியாதினி
சிலைபற்றிமாரனும் மெனைகுத்திமாய்த்திடும்
சிந்தனைசொலகம்மால் ஆகாதாகாது
சிந்தித்தாலிவளையே இந்திரபோகம்
சீரிடில்வந்திடும் மாதிடகோபம்
அந்தரதேவரால் வந்திடுசாடம்
அணையாவிடிலோ இவள்மனஸ்தாபம் (அழகே)

(ஆரேசையா என்ற வர்ணமெட்டு.)

பல்லவி.

மானேவாடி மலரணையில்கூடி
மருவி சுகம்தாடி

அநுபல்லவி.

தேனேஎன்மீதேன் வன்மம்
தேவீஈடேருன் ஜன்மம்

சரணங்கள்.

மடமயிலேமாரன்
சாம்விடுரான்தீரன்
மருமாதரைப்பாரேன்
மங்கையரே இங்கிர்தமாய்
அங்கஜனும் சங்கைகெட (மானே)

சரசலோசனி.

பல்லவி.

வேண்டாமய்யா விரகங்கொண்டமெய்யா
விபரீதமாம் துய்யா

அநுபல்லவி

வேந்தனே ஏதாகாது
சாந்தமும்வை என்மீது

சரணங்கள்.

அரசர்க்கடுக்காது
முறைதவரில்தீது
வருமிதுதப்பாது
அஞ்சுமெனை நெஞ்சதனில்
கொஞ்சமும் நினைந்திடீர் (வேண்டா)

வச்சிராயு:—என்ன ஒய்யாரம் என்னகெம்பீரம் என்ன சிங்காரம் அடடா இவளைப்பார்த்து நாம்சும்மாயிருக்கினும் அப்படுபாவி யாகியமதன் தகிக்கின்றானே என்செய்வேன்.

(கேளடிமயிலே என்ற-வர்ணமெட்டு.)

நீவாடி கூடிடலாம் நாம் பாடியாடிடலாம்
நாகரீகத்தோடேகநிதிக்குள்
கோபம்விடுத்த மோகனமுத்து (வாடி)

அட்டிசெய்யாதே தொட்டிடுமாரன்
விட்டிடும்கணையை எட்டியடித்துநாம் (வாடி)

மதலாகிரியே அறிவாய்இனியே
இதுவே தருணம் எனைச்சேரவே நீ (வாடி)

சங்கையிலாது மங்கைநீஓடி
இங்ஙனம்வந்துன் கொங்கையைதாடி (வாடி)

ஏகமனத்துடன் ஏகமுகூறைக்கொக்
கோகவிதப்படி போகமளித்திட (வாடி)

(என்னடி இன்னமும்மோடி என்ற-வர்ணமெட்டு.)

சரச.—வேண்டாமடா ஈதன்யாயம்
வேற்றோர்கைப்பாருன்ஞாயம்
தீண்டாவிளக்கினில் மாண்டபூச்சிபோலே
ஏண்டாகுதிக்கிறாய் தாண்டிபதைக்குராய் (வேண்)

புத்தியில்லாகுடிகேடா என்னை
நத்திவருநாதேபோடா
முத்திக்கொடுக்கஉன் பத்தினியைக்காணு
சித்தங்கலங்கிநீ சீசிஅணுகாதே (வேண்)

(மலடிவயிற்று என்ற-வர்ணமெட்டு.)

வச்சி:—மாரன்விடுங்கணை பொல்லாது எனை
வேறுவிதத்தினில் வெல்லாது நீ
சேரேன்என்பதுசெல்லாது அதுநில்லாது

கற்றதையென்னிடம் பேசாதே நீ
கவலைகொண்டெந்தனை ஏசாதே நல
முத்தமிட்டெனைச்சேரக்கூசாதே கைவீசாதே

சரச:—அன்னீதமென்பது ஆகாது மதி
அரசர்கட்கெபபோதும்போதாது நான்
சொல்லியமொழிவீண்ஆகாது இனிவருந்தீது

ராவணன்கெட்டதும் பெண்ணாலே கொடும்
ராக்ஷதர்பட்டதும் பெண்ணாலே சிரம்தாருகன்
அற்றதும் பெண்ணாலே தலை போம்மேலே

சரச:—ஏ அரசே கொஞ்சமேனும் அஞ்சாமல்யான் இதுவரைஉன் மனம் எவ்வாறுற்றதென சோதித்தேன் நான் காஸ்மீர் தேசத்தரசகுமாரத்தி என்தந்தைஓர் அரசனுக்கு பாணிக்கிரஹணம் செய்துக்கொடுத்தார் என்கணவனும்யானும் எங்கள் சொந்த நகர்க்கேகும் தருணத்தில் ஆற்றில் பிரவாகம்வந்து எங்களை யடித்து வந்துவிட்டது அதில் என்கணவா மரித்துவிட்டனர் நான் எடுத்து அடக்கஞ்செய்துவிட்டு துயருற்றிருக்குங்காலத்தில் அவ்வேடன் என்னைவர்ப்புறுத்தி அழைத்துவந்தான் தெய்வானுகூலத்தால் தாம்வந்து அவனைச் சிரச்சேதம் செய்துவிட்டீர் இனி உம்மை யானடைய யாதொரு தடையுமில்லை செல்வோம்நகர் மகாராஜ் ஆனால்ஒன்று என்கணவன் இறந்து 40-நாள்வரை நான் புருடர்முகம் பார்க்கப்படாது ஆதலால் எனக்கு வேறே ஓர்மாளிகைகட்டி 40-நாள்வரையிலும் புருஷர்வராது தினப்பிரதி 32-வகை தர்மமும் புரிந்து வரவேண்டும் அப்படி வந்தால் என்பீடை எனை விட்டகலும் மகாராஜ்.

வச்சி:—அடியென் கண்ணே 40-நாள் செல்லுமா சரி என்ன செய்கிறது ஆரடா காவலன் இவள் மனேயிஷ்டப்படி செய்வாய்.

பொது-வசனம்.

சரசலோசனி துக்கம்கொண்டாடுவதாய்ச் சொல்லி இரவில் நூலேணி மார்க்கமாய் இரங்கி ஆண்வேடந்தரித்து சன்யாசிபோல உருவெடுத்து தன் புருடன்நகராகிய வித்யாபுரிக்கு போகும் தருணத்தில் விரதபூஷணனை ஆற்றிலடித்துப்போய் ஒரு கரையோரம் ஒதுக்க எழுந்து சரசலோசனியை தேடிக்கிடைக்காமல் தன்னகர்க்கேகி தன்னாயகியை நினைந்து புலம்பல்.

## விரதபூஷணன்.

(ஐயாஎன்ஜானகியை ஆர்எடுத்தது என்ற வர்ணமெட்டு.)

திங்கள்முடிதரித்த நங்கையுமையாள்பாகா
எங்கேசென்றேதேடுவேன் ஈசா ஈசா ஈசா
மங்கையரைககாணேனே செங்கைகொண்டேகினளே
அங்கம்புதருதேசர் வேசா வேசா வேசா
கண்ணேமணியேஉன்னை பெண்ணேயினிஒருக்கால்
கண்ணினில்பார்ப்பதினி எப்போ எப்போ எப்போ

உண்ணேன்ஒருநாளும் யான்எண்ணேன்மறுமாதரை
கண்ணேநீஓடிவாரா தேனே தேனே தேனே

சரசலோசனிஉன்னை கிரகதோஷமும்பற்ற
விரதபூஷணன்வாட லானேன் லானேன் லானேன்

அரசுபுரிந்துயானும் சிரசற்றபேய்தனைபோல்
நினைவுங்குலைந்துதடி மானே மானே மானே

வெள்ளபிரவாகத்தி லுள்ளங்கலங்கநீயும்
துள்ள துள்ளப்போனயே தேனே தேனே தேனே

கள்ளங்கபடறியாய் வள்ளல்தயவுடையாய்
உள்ளங்குளிரஓடி வாராய் வாராய் வாராய்

சரசலோசனி என்னும் மாயசந்யாசி

ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சம்போ—சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ (சங்கர)

பேசாவிடும்பைகள்பேசி—சுத்தப்
பேயங்கமாகி பிதற்றிதிரிந்தேன்
ஆசாபிசாசை துரத்தி—ஐயன்
அடியிணைகீழே யடக்கிகொண்டாண்டி (சங்கர)

தூங்கையில்வாங்கிடும் மூச்சு—மேலே
சுழிமாறிவாங்கையில் போனதும்போச்சு
பாங்கானதிருநா ளுண்டாச்சு—இங்கே
பலபேர்கள்கூடி கதைபேசலாச்சு (சங்கர)

நீங்காதமாய்கை மேல்பூச்சு—இங்கே
நிசவீடுசுடுகாடு நிலவரமாச்சு
தாங்கமுடியாதசிவ ஜோதி—யோக
சரவணபவானந்த சாமிதான் துணையே (சங்கர)

சன்யாசி.—ஆஹா நாம் எவ்வளவோ துயரடைந்து கடவுளின் அனுக்கிரகத்தால் உயிரிழக்காமல் என் சொந்தநகராகிய வித்யாபுரி வந்துவிட்டேன் இவடம் கேள்வியுற்றதில் நம் நாயகன் நம்மிட கவலையால் அதிக துன்பப்படுகிறாராம் அவரைக் காணுவதே சரி.

சன்யாசி:—ஆரய்யா காவலர்

சேவ:—என் சுவாமி.

சன்யாசி:—உங்களரசரிடம் யாரோ ஓர் சன்யாசி வந்திருப்பதாக உரைப்பாய்.

சேவ:—மகாராஜ் துவாரத்தில் ஓர் பால்ய சன்யாசிவந்து தங்களை பார்க்கவேண்டு மென்கிறார்.

விரத:—விட்டுவிடுவாய்.

சன்யாசி:—ஆ ஆ நாதா உனக்கும் கெடுதிவந்ததா.

சரசலோசனி.

(இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.)

துரையேயுன்னை இரையோனிப்படி செய்தானோ ஈதேனோ
தொல்லுலகரசர் அல்லும்பகலும்
வல்லவாவுன்புகழ் சொல்லுவதும்போச்சோ (துரை)

அங்கவடியழகுங் குன்றிடலாச்சே ஆ ஆ மன்னவா
ஆனாலுமிக்கதி வானோருந்தேவருங்
கோனுனவேந்தருங் காணாரென்னுளிலும் (துரை)

கூராலுமாறிக்கூறுகின்றீரேயென்கோவே ஆ ஆ மன்னவா
கோடிசூரியரும் கூடியோருருவாய்
நாடியதிருமுகம் வாடிவதங்கவே (துரை)

என்னைத்தொட்டுமென்னசுகம்பெற்றீர்கோவே ஆ ஆ மன்னவா
ஏதென்றுசொல்லுவேன் பாதகியைத்தொட்ட
வேதனையாலல்லோ தீது நள்வாய்த்தது (துரை)

புருஷர்க்கின்பம்பெண்டாலென்பார்மொழிநாதா ஆ ஆ மன்னவா
பூமியிலேபாவிசாமி நானேயுங்கும்
நேமிக்கானகதி காமிக்கும்வாய்த்ததோ (துரை)

விரத:—அடியென் கண்ணே.

விரதபூஷணன் - தரு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏனழுகிறாய் மாதே ஏனழுகிறாய்.

அநுபல்லவி.

வானுலகிலமரீசன் வகுத்தவிதியிதுவாகும். (ஏன)

சரணங்கள்.

முன்னஞ்செய்தகர்மம்வந்து மூண்டுதித்ததுயர்தந்து
நன்னிலைமறந்துநீதான் நாயகியுருகலாமோ (ஏன)

புத்தியிலுயர்ந்தமதி பத்தியிலமர்ந்தசதி
நித்தியமன்றோயிவ்வாழ்வு நினைப்பதுஞ்சரியாமோ (ஏன)

எந்தநாளுமுனைக்காண வெனக்குவராதெனத்தோண
நொந்தவன்மனங்களிக்க நோக்கினதேபலன்போதும். (ஏன)

போதுவசனம்.

விரதபூஷணனும் சாசலோசனியும் சந்தித்து ஒவ்வொருவர் குறையும் சொல்லிமுடிந்தவுடன் வித்யாபுரியில் சுகஜீவியாய் வாழ்ந்தனர். சுபம். சுபம். சுபம்.

## மங்களம்.

(ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜெயமங்களம் என்ற வர்ணமெட்டு.)

தில்லைநடராஜனுக்கும் ஜெயமங்களம் பெருந்
தொல்லையரு மீசனுக்கும் சுபமங்களம்
வல்லபரந்தாமனுக்கும் வடிவேல்முருகனுக்கும்
நல்லகணநாதனுக்கும் நமனையுதைத்தோனுக்கும் (தில்லை)

மாதுகலைவாணியற்கும் சாதுகட்குமங்களம்
வேதமதினமுறையும் வேதியர்க்குமங்களம்
நீதிசெய்யரசருக்கும் நேருத்தியோகருக்கும்
ஆதிகவிவாணர்கட்கும் அன்புளசபேசருக்கும் (தில்லை)

பாடிஅச்சிலிட்டவர்க்கும் பாடுவோர்க்குமங்களம்
ஆடியோடத்தும்டிராமா அதிபருக்குமங்களம்
கூடிப்படிப்போருக்கும் குணமாகவிற்போருக்கும்
ஆடிடபார்ப்போருக்கும் அதைவிலைகொள்வோருக்கும் (தில்லை)

பாரறியஅச்சிலிட்ட பாலையற்குமங்களம்
பாலவிர்த்திபோதினி இவ்வச்சியந்தரம்மங்களம்
சீராய்நடப்போருக்கும் சிவனைமறவாதார்க்கும்
நாராயணாவென்பார்க்கும் நமனைவிரட்டுவோர்க்கும் (தில்லை)

## லஞ்சபிரியர்களைபற்றி கூறியது.

பல்லவி.

இவர்களுக்கேன்உத்தியோகம் - நல்ல
ஈனமானங்கெட்டுத் தானம்வாங்கித்தின்னும் (இவர்)

அநுபல்லவி.

தவமெங்கள்சாதியின் தனித்தொழிலென்பார்
சாவிலும்போய்பணம் தேடியேதின்பார் (இவர்)

சரணங்கள்.

கொடுத்தவனேழையா யிருந்திடிற்கோபம்
கொள்கிறானதிகாரி லஞ்சமோலாபம்
துடித்துதுடித்துமவன் கொடுக்கிறான்சாபம் ஐதை
சொல்லிசொல்லிப் பலரிடிக்கிறார்பாபம் (இவர்)

௨

டிராமார்களில் பாடிவருகிற

# ஹிந்துஸ்தான் பார்ஸி பதங்கள்.

வவ்வாஜி வாஜிவான் வானுவான் ஜீபடே
டாம் டூம் கைலோ பலே
சோடேஜி ஹைசேகிபாத் ஹாய் ஹாய்
சோடேஜி ஹைசேகிபாத்
ஜாவ் ஜாவ் லக்க லக்க பாவ் பாவ் வவ்

ஜாதிநக்கர்தேக்கோ ஜமாநக்கர்தேக்கோ
சோடேஜி ஹய்சேகிபாத்
ஜாவ் ஜாவ் லக்ல லக்க பாவ் பாவ் வவ்

தாரிதிலாகுதிலபரு... தனமனுதனகுருபானுகரே
கரிகரிதரவ... பிரதபிரதப்யாரி
தடகதுகே தடகதுகேதில் தாரி

நிகாஹே பேருஹா திபரசலாகே
நிகாஹே பேருஹா நாசோசலாஹே
நிஸீகே ஹங்குலே பஜங்கேசெதா ஹ

நிகரபர்பேருகா நாசோசலாகே
கரிகரிதாதா புரதபுரதபியாரி
தடகதுகே தடகதுகேதில் தாரி

ஆயமுஜேசதர்கேஜி கர்னேஸதாயா
மேராபியாராநஹீதில் யாராபிநஹிகொயி
சாராநஹி ஹைகுதாயா ஹாயகொபி
சாராநஹி ஹைகுதாயா மொ
பயாராநஹி திலயாரா நஹிலதாஹைரா ஆய
யிகாமேஆகமே பரியாதயே செவன்முனுமே
சுனவும் தர்தில அகர்வேசா
சுனவாலாமே கபாமே ச்ரிகரம் கருவடேஅர்கரம்
பதலதேஹிகா ல சூலதாஹாய்
மயல்ஹோ பபுல்தேஹி
அலபிதானுமிஸா பூராசய்யாதுமிலா
திலகவுஸ்தாதுமிஆ சத்தவஜல்தாதுமி

சாஹிஸ்தேஹிதனமில்　　　மிஸமதுயாத்தேஜாத்தே
ஆயஜாலிம்ஜாலிமே ரஹம்னகாயா
திலயாராஹிமோ பியாராஹி

ஆயேசப்பம் படுமைதோரிபையா
சதாவோனரேபையா　　　ஆயே
பியாபியாரிகெதில்மே　　　ஜாவுமோரி
மைகும்பிரஹாக்கி　　　மாருகியங்கட்டாரி
கட்டாரிமோரிசய்யா
கியாவ்மாபுமோரிசய்யா
அச்சாரிமோரிபையா
பியாரிதோரி சையா
சலுபலியாம் மலுபலியாம் பேகலியாம்ஓசய்யா　　　ஆயே

திருச்சினஜாரியா　　　மாலுங்கட்[illegible]ரிஜான்
மைவாரி மாலுங்கட்டாறியா[illegible]ன்
அர ஹாய் ஹாய் மாலுங் கட்டாறிய[illegible]ஜான்
மோராபியாகா　　　மோராபியாக
மோராபியாகா தில்லாலஜாவோ　　　அர
ஆஷத்துகூர்த்தனஹாவோ　　　திரு
அர கோரபதனுமான்　　　ஜானிகுண்டலிஜான்
மைவாரி ஜானிகுண்டலிஜான்　　　அர
ஹாய் ஹாய் ஜானிகுண்டலிஜான்
மோராசிமேனசே　　　மோருசிமேனசே
மோாசிமேனசே　　　ஜோபன்னஜாவோ　　　அர
ஆசத்துகூர்த்தனஹாவோ　　　திரு

8175

தஸ்குமாறேதா　ரேகுவான　　　கோரலாயுரே
தஸ்குமாறேதா　ரேகுவான
கோரலாயுரே　கோரலாயுரே　கோரலாயுரே　　　தஸ்
கச்சகச்சசாவல்மே கிச்சடிபனுயி
கானவாவாராஜா　　　கிலாமேனவாலோராணி　　　தஸ்
பக்கபக்கப்பாமேனமே　　　பிடியாம்பனுயி
கானவரலேராஜா　　　கிலாமேனவாலோராணி　　　தஸ்

ஹி[illegible]துஸ்தான் பார்ஸி பதங்கள் முற்றிற்று.

இதின் வர்ணமெட்டுகள் அடியிற்கண்டவர்களிடம் அறிந்துக்கொள்ளலாம்.

1. சேலம் செவ்வாப்பேட்டை புக்டிபோ தி. சு. கணபதிபிள்ளை.
2. மேற்படியூர் கானபொக்கிஷம் ஜி. பொன்னுசாமி முதலியார்.
3. மேற்படியூர் ஜவுளிக்கடை அளகப்ப செட்டியார்.
4. சேலம் புக்பயிண்டர் ப. முருகப்ப செட்டியார்.
5. மேற்படியூர் குகை அவஞசிபண்டாரம்.
6. ஆத்தூர் பிட்டீசன் ரைட்டர் சோலைமுத்து முதலியார்.
7. மேற்படியூர் டைலர் இரங்காமி நாயுடு.
8. மேற்படியூர் யாபுசர்யபு குமாரர் சம்சுசாயபு.
9. தர்மபுரி தாலுகா பாலக்கோடு கஸ்தூரி செட்டியார்.
10. மேற்படி தாலுகா பாப்பாரபட்டி பொடிகடை நாராயணசாமிநாயுடு
11. திருச்சியைசேர்ந்த பட்டவர்த்தலை பலசாரக்கு வியாபாரம் சி. முத்துகுமாரசாமி பிள்ளை.

---

## மதிமோச விளக்கமென்னும்

### ஓர் புதிய நூல்.

உலகத்தில் நடக்கும் பலவித மோசங்களில் முக்கியமான 115-மோசங்கள். இதில் எழுதப்பட்டது இது முற்றிலும்பார்த்தால் நம் சினேகர் எவ்வித மோசத்திற்கும் இடங்கொடா ரென்பது உண்மையினும் உண்மை போலிவிளம்பரமன்று படிக்க படிக்கத் தெகிட்டா ஆனந்தம் விளைவிக்கும். இதன் குரைந்தவிலை அண-8.

வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

---

## இலாகிரிப்பிரியரென்னும் குடியா துயரம்.

கள், சாருயம், கஞ்சா, அபின் முதலிய மயக்கந்தரும் வஸ்துக்களையுண்டு வெறிகொண்டு தாம்தேடியதும் தங்கள் தாய்தந்தையர் பாட்டன் பூட்டன் சம்பாதித்துவைத்ததுமாகிய அளவற்ற பொருள்களை யெல்லாம் கள் சாருயத்திற்கும் அத்துடன் தாசிவேசிகட்கும் சூதாட்டத்திற்கும் பின்னும் பல உதவியற்ற விஷயங் களுக்குமாகச் சிலவு செய்துவிட்டபின் குந்தினையா குரங்கே உன்சந்தடி அடங்க என்ற பழமொழிக் கிணங்க, ஆட்ட பாட்டமெல்லாம் அடங்கி கட்ட துணிக்கும் தின்னசோற்றுக்கும் அலைந்து திரிந்து தங்கள் பொன்போன்ற தேகத்தைக் கெடுத்துக்கொண்டு தம்மையொத்த பெரிய மனிதர்களைக் கண்டு வெட்கப்பட்டு தலைகுனிந்தும் உயிரோடு வாழும்படியான நிலைமைக்கு வந்துவிடும் மதுபானப் பிரியரின் சரித்திரங்களை இனிய செந்தமிழ் நடையில் பலேதமாஷாகவும் விகடமாகவும் எழுதி அச்சிட்டிருக்கிறோம். விலை அண 4.

---

பபூன்ஸ் ஆக்ட் என்னும் அகட விகட மகாநாடகம். விலை அண-6.

---

மேற்குறித்த புத்தகங்களும் மற்ற இதரபுத்தகங்களும் வேண்டுமானால் அடியிற்கண்ட விலாசதாரரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தி சு. கணபதி பிள்ளை புக்டிபோ,
சேவ்வாப்பேட்டை,
சேலம்.